மேழிச்செல்வம்

MADRAS RECORD OFFICE
5104
11 OCT 1965
MADRAS



இரட்டிப்பு விளைச்சல் தரும்
வீரியச் சோளம் சி.எஸ்.எச் 1.

விசுவாவசு ௵ புரட்டாசி ௴
செப்டம்பர் - அக்டோபர். 1965.

25 காசு

மதுரையில் 'வேளாண்மைக் கல்லூரி' திறப்பு விழா.



மதுரை வேளாண்மைக் கல்லூரி திறப்பு விழாவில், கல்லூரி தலைவர் திரு. மரியகுழந்தை அவர்கள் முதல் அமைச்சர் திரு எம். பக்தவத்சலம், விவசாய அமைச்சர் திரு பி. சக்கன், உணவு அமைச்சர் திரு ராமையா ஆகியோர் முன்னிலையில் வரவேற்று உரையாற்றுதல்.



கோவை வேளாண்மைக் கல்லூரி தலைவர் திரு B. W. X. பொன்னையா அவர்கள் சொற்பொழிவாற்றுதல்.

விவசாயிகளுக்கு......!

விவசாய சம்பந்தமான கேள்விகளுக்கு 'மேழிச் செல்வம்' பத்திரிகை மூலமாக பதில் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கம் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி தங்கள் முகவரியுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு கோரப்படுகிறார்கள்.

கேள்விகள் அனுப்பப்படவேண்டிய முகவரி—

மேழிச்செல்வம் கேள்வியும் பதிலும்
விஸ்தரிப்பு நிபுணர்,
விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக்கூடம்,
கோயமுத்தூர்-3.

குறிப்பு :—கேள்விக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

அட்டைப்பட விளக்கம் :—

(சி. எஸ். எச். 1 (C.S.H.I.)

* புது ரகச் சோளம்.
* 90 நாட்களில அமோக விளைச்சல் கொடுக்கிறது.
* போதிய உரமும் நீர்ப்பாசனமும் இருந்தால் ஏக்கருக்கு 3,000 கிலோ தானியம் வரை கொடுக்கக் கூடியது.
* தானியம் உருவில் பெரியதாகவும், நல்ல சுவையுள்ளதாகவும், நல்ல சமைக்கும் தன்மையுள்ளதாயும் இருக்கும்.
* கோடையில் பயிரிட ஏற்றது. தமிழ்நாடு முழுவதும் பயிரிடலாம்.

மேழிச்செல்வம்

வருடாந்தர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ 0·50

உள்ளுரை

	பக்கம்
மதுரையில் வேளாண்மைக் கல்லூரி ..	5
ஜப்பானிய முறை நெல் சாகுபடியால் பெற்ற கூடுதல் விளைச்சல் ..	6
தஞ்சை தீவிர சாகுபடித் திட்டத்தில் குறுவை நெல்லில் இரட்டிப்பு விளைச்சல்	10
தென்னந்தோப்பு பராமரிப்பு ..	11
அதிசயக் கிழங்கு கோவையில்! ..	12
ருசியன் பருத்தி (பி.ஆர்.எஸ். 72) ..	15
கல்லுப்பட்டி இரும்புக் கலப்பை ..	18
பர்கூர் ..	19
வானொலிச் செய்திகள் ..	22
தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்பின் விலாங்குப் புழுக்களும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்.	26
முந்திரியின் முன்னேற்றம்	28
1965-ம் ஆண்டு ஜூலை மாதக் கால நிலை அறிக்கை.	29
உங்கள் விதைகளை பரிசோதனை செய்து கொள்ளுங்கள்	30

விளம்பரங்கள் .

நுண்ணிய வேலைத் திறனமைந்த ஆடைகள்	4
அமெரிக்கன் ஸ்பிரிங்ஸ் ஒர்க்ஸ் ..	13, 27
உரங்களே உங்கள் சிறந்த முதலீடு ..	14
பயிர் அபிவிருத்திக்குப் பணி புரிகின்றது.	17
ராஜா பண்ணைத் தோட்டம் ..	20
பசிப்பிணியிலிருந்து நிவாரணம் ..	21

நுண்ணிய வேலைத் திறனமைந்த ஆடைகள்

பலபல டிசைன்களிலும், வண்ணங்களிலும்
நுண்ணிய வேலைத் திறனமைந்த
ஆடைகள்: கண்களுக்கு இன்ப மூட்டுகின்றன,
பரிசித்துணர பதமாக உள்ளன,
உலக முழுவதிலும் அலங்கரிக்கின்றன.

மண்டசார் கல்வெட்டு 473 கி.மு.

கலை அழகும் நுண்ணிய வேலைத் திறனும் ஒருங்கே அமைந்து விளங்குவது இந்திய நெசவுக்கலை. கைத்தறி ஆடைகளின் சிறந்த உபயோகத் தன்மையும், பரவலான வகைகளும் விளங்குவதைப் போல உலகத்தில் வேறு எந்த இடத்திலும் செய்யும் ஆடைகள் விளங்குவதில்லை.

பரம்பரையாக ஏழுபது லக்ஷம் நெசவாளர்கள் போற்றி வரும் இந்த உயர்ந்த தொழிலில், நவநாகரீக உலகிற்கு ஏற்ற ஆடைகளையும் அலங்காரத்தையும் அளிப்பதற்காக புதிய டிசைன்களையும் தொழில் நுணுக்கங்களையும் புகுத்தியுள்ளோம். முன்பு இருந்ததை யெல்லாம் விட மேலும் அழகுடன் மின்னுகின்றன இந்திய கைத்தறி ஆடைகள். பலபல டிசைன்களிலும், வண்ணங்களிலும், மோஸ்தர்களிலும் கிடைக்கின்றன. இந்த ஆடைகளுக்கு புதிய புதிய உபயோகங்கள் தோன்றுகின்றன. உலக முழுவதும் உள்ள மார்க்கெட்டுகளில் கைத்தறி ஆடைகளுக்கு ஏராளமான கிராக்கி. சென்ற ஆண்டு கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்ததின் மூலம் 14 கோடி ரூபாய் அன்னிய செலாவணியை சம்பாதித்துக் கொடுத்துள்ளோம்.

ALL INDIA HANDLOOM BOARD

அகில இந்தியக்
கைத்தறி
போர்டு

DA-65/221

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனு
லுழந்தும் உழவே தலை.

மலர் 22 | விசுவாவசுஹூ புரட்டாசிமீ 1965—செப்டம்பர்-அக்டோபர் | இதழ் 9

மதுரையில் வேளாண்மைக் கல்லூரி

விஞ்ஞான அறிவையும், நவீன உழவு சாதனங்களையும் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். நவீன முறைகளை நம் நாட்டு உழவர்களும் அறிந்து கொள்ள வேளாண்மைக் கல்வி உதவுகிறது. வேளாண்மைக் கல்லூரிகள் இத்துறையில் பெரும் பணியாற்றுகின்றன. தமிழகத்தில் 1876-ஆம் ஆண்டில் சென்னை சைதாப்பேட்டையில் வேளாண்மைக் கல்வி பள்ளியொன்றில் தொடங்கப்பட்டது. வேளாண்மைக் கல்லூரியின் அவசியத்தை உணர்ந்து 1878-ல் இதைக் கல்லூரியாக மாற்றினர். பரவலான முறையில் பயிற்சி அளிக்கும் வசதியுள்ள இடத்திற்கு இதை மாற்ற வேண்டிய எண்ணத்தால் 1907-ல் கோயம்புத்தூரில் வேளாண்மைக் கல்லூரி எழுந்தது. பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் வேளாண்மைக் கல்வியில் பயிற்சி அளிக்கப்பட்டது.

கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த வேளாண்மைக் கல்லூரி முதலியவற்றில் படித்து வரும் பட்டதாரிகளின் எண்ணிக்கை நாட்டின் தேவைக்குப் போதுமானதாக இல்லை. இத்தேவையை நிறைவு செய்வதற்காகவே மதுரையில் வேளாண்மைக் கல்லூரியை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. இக்கல்லூரி 1965—66 கல்வி ஆண்டு முதல் செயல்பட ஆரம்பித்துள்ளது. இதில் 80 மாணவர்கள் சேர்ந்து கல்வி பெற வழி செய்யப் பட்டுள்ளது.

இக்கல்லூரியின் தொடக்க விழா 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ம் தேதி அன்று மதுரையில் சிறப்பாக நடந்தேறியது. வேளாண்துறை அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள் தலைமையில், முதல் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் கல்லூரியைத் தொடங்கி வைத்தார்.

வேளாண்மையின் நுணுக்கங்களையும் மற்ற முன்னேற்றங்களையும் உழவர் பெருமக்களுக்கு விளக்கி விளைவைப் பெருக்க வேளாண்மை பட்டாதாரிகள் உதவுகின்றனர். வேளாண்மையில் நாட்டம்கொண்ட மாணவர்களுக்கு நல்ல பயிற்சி அளித்து வேளாண்மை பட்டாதாரிகளை உருவாக்கும் பணியை வேளாண்மைக் கல்லூரிகள் ஏற்றுள்ளன. நாட்டின் தலையாய பிரச்சினையான உணவுப் பிரச்சினையை தீர்க்கும் வேளாண்மை வல்லுநர்கள் இப்பட்டதாரிகளே! இத்தகைய வித்தகர்களை பெரும் அளவில் உருவாக்கி, நாட்டுக்கு சேவை புரிய தயார்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றொரு அறிவியல் ஆலயமாகும்.

தமிழகத்தில் வேளாண்மை சீர்குலையாமலும் பலன் மிக்கதாகவும் உறுதியாகவும் இருப்பதற்கு, வேளாண்மை ஆராய்ச்சியே காரணமாகும். தமிழகத்தில் வேளாண்மை பற்றி மிகத் தீவிரமாக ஆராயப் பட்டு நடைமுறையில் சோதித்துப் பார்க்கப்பட்டிருக்கிறது. அதன் பயனாகவே வேளாண்மையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

வேளாண்மைத் தொழில் முதன்மையாக நடைபெறும் பகுதிகளில், கல்லூரிகளை நிறுவி உழவர் களுக்கு வேண்டிய உதவிகளையும், ஆலோசனைகளையும் கூறிவரவேண்டியது மிகவும் அவசியமாகும்.

(9-ம் பக்கம் பார்க்கவும்)

ஜப்பானிய முறை நெல் சாகுபடியால் பெற்ற கூடுதல் விளைச்சல்

1963--64-ம் வருடத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பும், விளைச்சல் விவரங்களும்.

	சாதாரண முறை சாகுபடியின்கீழ்.	ஜப்பானிய முறை சாகுபடியின்கீழ்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1. சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கர்களில்).	2,806,653	2,736,816	5,543,469
2. கணிக்கப்பட்ட நெல் விளைச்சல் (டன்களில்).	2,501,585	2,987,892	5,489,477
3. கணிக்கப்பட்ட சராசரி ஏக்கர் விளைச்சல் (மணங்குகளில்).	22	28	....
4. ஜப்பானிய முறைச் சாகுபடியால் உண்டான கூடுதல் விளைச்சல் (ஏக்கருக்கு).	....	6 மணங்குகள்.	....
5. ஜப்பானிய முறைச் சாகுபடியால் உண்டான மொத்த கூடுதல் விளைச்சல்.	....	607,573 டன்கள்	....

1963–64-ம் வருடத்தில் ஜப்பானிய முறை நெல் சாகுபடி மூலம் மாநிலத்திலேயே அதிக விளைச்சல் கண்ட மூன்று விவசாயிகளின் விளைச்சல் விவரங்களும் சாகுபடி அனுபவங்களும் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

விளைச்சல் விவரம்

1. திரு. முத்தையாதாஸ், முக்காணி, ஸ்ரீவைகுந்தம் தாலுக்கா, திருநெல்வேலி மாவட்டம்.	100 மணங்குகள்
2. திரு. எம். தங்கசாமி, நட்டாத்தி, ஸ்ரீவைகுந்தம் தாலுக்கா, திருநெல்வேலி மாவட்டம்.	99 மணங்குகள்
3. திரு. சி. ஆறுமுகம், மடவர் விளாகம், ஸ்ரீவில்லிபுத்தூர், ராமநாதபுரம் மாவட்டம்.	98 மணங்குகள்

திரு முத்தையாதாஸ் தம் அனுபவத்தைக் கூறுகிறார்

“ சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவேதலை (குறள்)

தேசப் பாதுகாப்பிற்கு அடுத்தபடியாக உணவு உற்பத்திதான் இன்று இந்தியாவின் முக்கிய பிரச்சனையாக இருந்து வருகிறது. நிலவளமும் நீர்வளமும் மக்கள் சக்தியும் நமது தேசத்தில் அதிகமாக இருந்தும் உணவு விஷயத்தில் நாடு தன்னிறைவு பெறவில்லை என்பது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. விவசாய அபிவிருத்திக்காக சர்க்கார் எவ்வகை பெரும் முயற்சி எடுத்து காரியங்கள் செய்தாலும் விவசாயப் பெருங்குடி மக்கள் அதை உணர்ந்து உணவு உற்பத்தியில் போதிய கவனம் செலுத்தினால்தான் உரிய இலக்கை அடைய முடியும். சோம்பேறித்தனத்திற்கு இடம் கொடுக்காமல் உழைப்பை அதிகப்படுத்தி அதிக விளைவு காண விவசாயிகள் முன்வரவேண்டும் என்பது என் அவா.

நான் நெல்லை மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டாரத்தைச் சேர்ந்த முக்காணி என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். தாமிரவரணி சங்கமாகும் இடத்து முகப்பில் எனது கிராமம் அமைந்துள்ளது. சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தர்களுக்கும் பொது காணியாக இருந்து வந்ததால் மூவேந்தர் காணி என்பது முக்காணியென மருவி வழங்குவதாக வரலாற்று சிறப்புடன்

கூறப்படுகிறது. கொற்கைப்பாண்டியன் பெயரால் ஏற்பட்ட கொற்கை கால்வாயின் மூலம் எங்கள் கிராமத்தில் சுமார் 500 எக்கர் இருபோக நெல் சாகுபடியாகிறது.

நான் விவசாய அபிவிருத்தியில் மிகுந்த ஆர்வம் உள்ளவன். சமுதாய வளர்ச்சி திட்டங்களில் ஈடுபாடு கொண்டவன். பல ஆண்டுகளுக்கு முன்னரே விதைப் பண்ணை விவசாயி ஆக இருந்து கிராம விவசாயி களுக்கு பொறுக்கு விதை நெல் சப்ளை (விநியோகம்) செய்திருக்கிறேன்.

முத்தையா தாஸ்.

ஒருநாள் நான் எனது வயல்வெளிக்குச் சென்றிருந்தேன். அங்கே ஓரல் தொகுதிகிராமசேவக் சி. பரமசிவன் அவர்களும் விவசாய மேஸ்திரி டி. வி. வேலுச்சாமியும் வந்தார்கள். ஜப்பானிய சாகுபடி மூலம் அதிக நெல் மகசூல் அடையலாம் என்றும், அதற்குரிய தக்க ஆலோசனைகளை தருவதாகவும் தெரிவித்தார்கள். அதன் பேரில் இம்முறைகளை கையாண்டு நெல் சாகுபடி செய்ய முன்வந்தேன்.

நாற்றங்கால் தயாரிப்பு.—12 செண்டு நிலத்தை நான்கு முறை உழுது நாற்றங்கால் தயார் செய்தேன். 25 கிலோ பொறுக்கு விதை (ஏ.எஸ்.டி. 5) நெல்லுடன் 2 அவுன்ஸ் அக்ரசான் கலந்து நாற்றுப் பரவினேன். நாற்றங்காலுக்கு போதிய நீர் பாய்ச்சி அடிக்கடி கவனித்து வந்தேன்.

நிலம் தயாரித்தல்.—எக்கருக்கு 12 வண்டி கம்போஸ்ட் உரம் அடித்தேன். ஐந்து முறை போஸ் கலப்பையால் உழுதேன். 5 வண்டி தழை உரம் போட்டு ஆட்களை விட்டு மிதித்து கொடுக்கச் செய்தேன். கடைசி உழவிற்கு முன் 2 மூட்டை (100 கிலோ) சூப்பர் பாஸ் பேட்டும் 50 கிலோ பொட்டாசும் போட்டு நஞ்சையை நடவைக்கு தயார் செய்துக் கொண்டேன்.

நடுதல்.—நாற்றுகளை 37-வது நாளில் பிடுங்கி வரிசைக்கு வரிசை 9 அங்குலமும், நாற்றுக்கு நாற்று 6 அங்குலம் இடைவெளி விட்டு நடவு செய்தேன். 3 வாரங்கள் கழிந்தபின் ஜப்பானிய களைபிடுங்கும் கருவியால் களை எடுத்து பின், பி.எச்.சி. 10 சதவிகிதம் 10 கிலோ டஸ்டர் மூலம் தூவினேன். அமோனியம் சல்பேட் தூவினேன். பின் 15 தினங்கள் கழித்து பைட்டோலான் 1 கிலோ, பாலிடால் 1 டியூப் தண்ணீரில் கலந்து ஸ்பிரேயர் மூலம் காலை பனி பதத்தில் தெளித்தேன். அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி வந்தேன். பொரி பருவத்திற்கு முன் 15 கிலோ யூரியா தூவினேன்.

அறுவடை.—கதிர் நன்கு வந்தவுடன் அறுவடைக்கு சில தினங்களுக்கு முன் தண்ணீரை அடித்து வயலைக் காயவிட்டேன். அறுவடை செய்து பார்த்ததில் நான் எதிர்பார்த்த அளவுக்கு அதிகமாக (100 மாண்டு) நெல் மகசூல் கிடைத்தது. சாதாரண சாகுபடி முறையில் எனக்கு இதற்கு முன் இவ்வளவு மகசூல் கிடைத்ததில்லை என்பதையும் தெரிவித்து கொள்கிறேன்.

1963–64-ல் பயிர் விளைச்சல் போட்டியில் கிராம அளவிலும், வட்டார அளவிலும், முதற்பரிசு பெற்றுள்ளேன். நான் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்வதற்கும் ஜப்பானிய முறையைக் கையாண்டு அபரிமிதமான மகசூல் அடைவதற்கும் சிறந்த விவசாயியாக விளங்குவதற்கும் எங்கள் கிராம சேவக் சி. பரமசிவம் காரணமாக இருந்தார் என்பதையும், மன நிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் திரு எல். சீனிவாசன் அவர்கள் எங்கள் கிராமத்திற்கு வருகை புரிந்த போதெல்லாம் விவசாய வளர்ச்சி பற்றி கூறி உற்சாகம் மூட்டி வந்தார்கள். அவர்கள் ஆசியால் நெல் சாகுபடியில் முதல் ஸ்தானம் அடைந்ததை எண்ணி, பெருமைப்படுகிறேன். தொடர்ந்து உணவு உற்பத்தியில் நிறைந்த கவனம் செலுத்தி, தேசத்தின் வறுமையை கழிக்க, எல்லா வகையிலும் பாடுபடுவேன் என்பதையும், சமுதாய நலத்திட்ட அதிகாரிகளுடனும், விவசாய வளர்ச்சி பிரிவு அதிகாரிகளுடனும் பூரணமாக ஒத்துழைப்பேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

திரு தங்கசாமி அவர்கள் தரும் தகவல்

திருநெல்வேலி மாவட்டத்தில் எனது கிராமம் நட்டாத்தியில் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் 50 எக்கர் வரை குளத்து பாசனம்மூலம் வளம் பெறுகிறது. வருடத்திற்கு இரண்டு மகசூல் வரை கிடைக்கிறது. எப்பொழுதும் நீர்ப்பாசனம் அமைந்த பெருங்குளம் கிராமத்திலிருந்து தண்ணீர் கிடைக்கிறது. நஞ்சை நிலமானது சிறிது கருப்பும் சிவப்பும் கலந்த தன்மையைப் பெற்றது.

உரமிடல்.—எனது வயலில் எக்கருக்கு 15 வண்டி வரை தொழு உரம் போட்டேன். எற்கனவே டேஞ்சா [தக்கைப்பூண்டு] பயிரிடப்பட்டிருந்ததால் 2வண்டிவரை போட்டேன். நன்றாக தொழியாகும் வரை சேறுக்குவதற்கு நான்கு உழவு வரை



எம். தங்கசாமி

போட்டேன். நாற்று நடுவதற்கு முன்பு 150 ராத்தல் வரை சூப்பர் பாஸ்பேட் உரம் இட்டேன். கடைசி உழவில் 75 ராத்தல் வரை அமோனியம் சல்பேட் போட்டேன்.

விதை தயாரிப்பு.—என்னிடம் விவசாய அலுவலகத்தி லிருந்து கொடுக்கப்பட்ட ஏ.எஸ்.டி. 5 நெல் விதையை நாற்றங்கால் தயாரிப்பதற்கு 25 கிலோ வரை எடுத்து 1 செண்டு நிலத்திற்கு 3 ராத்தல் நெல் வீதம் நாற்றுப் பாவ ஏற்பாடு செய்தேன். இதற்கு முன்பாக பயிருக்கு தூர் அழுகல் நோய் வராமல் இருப்பதற்காக நெல்லை நன்றாக கழுவி நிழலில் வைத்து காற்றில் நன்றாக உலர வைத்து 20 ராத்தல் நெல் விதைக்கு 2 தோலா என்ற அளவில் அக்ரஸான் மருந்து சேர்த்து குலுக்கி உலர வைத்தேன். நாற்றங்காலுக்கு முறையாகத் தண்ணீர் பாய்ச்சினேன். அத்துடன் களைப்பூண்டுகளை அவ்வப்போது எடுத்தேன்.

நடவு.—நெல் வகை, அதன் விளைவு காலம், சூழ்நிலை, மண் தரம் இவைகளுக்குத் தக்கபடி நடவும், நாற்றுகள் எண்ணிக்கையை விட்டேன். நாற்று நட்ட 15 நாட்களுக்கு ஒரு முறை நீரை வடித்தேன். வரிசைக்கு வரிசை 9 அங்குல இடைவெளியும், நாற்றுக்கு நாற்று 4 அங்குல இடைவெளியும் விட்டு ஜப்பானிய முறைப்படி வரிசை நடுவில் நட்டேன். நட்டு ஒரு மாதத்திற்கு பின்பு 75 ராத்தல் அமோனியம் சல்பேட் போட்டேன். 15 நாட் களுக்கு ஒரு முறை இடை உழவு கருவியினால் களை எடுக்கப்பட்டது. இதனால் களைகள் நீங்கி சாற்று வேர் பாகங்கள் பட்ட தூர் கட்ட ஆரம்பித்து பயிர் நல்ல முறையில் வளர்ச்சி பெற ஆரம்பித்தது.

பூச்சி தடுப்பு.—நட்டு 20 நாட்களுக்குப் பிறகு பூச்சி தடுப்பு முறை கையாளப்பட்டது. பி.எச்.சி.யும், டி.டி. டீயும் கலந்து தூவினேன். எனக்கு இதுவரைக்கும் ரூ. 15 வரை செலவானது.

அறுவடையின்போது எனக்கு எதிர்பார்த்த அள விற்கு மேல் (99 மாண்டு) கிடைத்தது. இத எனக்கு விவசாய உற்பத்தியில் அதிக ஆர்வமும் நல்ல இலாபமும் கிடைக்க ஏதுவாயிற்று. இவ்வளவு அதிகமான மகசூல் வருவதற்கு எனது தொகுதி கிராம சேவக் திரு. ராமை யாவும், வேண்டிய விளக்கமும் ஒத்துழைப்பும் தந்து உதவினர்.

இனி மேலும் நான் அதிகமான மகசூல் தற்போது கிடைத்ததைவிட அதிகமாக கிடைக்க விவசாய இலாக் காவினருடனும் சமுதாய நல திட்ட அதிகாரியுடனும் வேண்டிய ஒத்துழைப்பு பெற்று நாடு விவசாயத்துறையில் முன்னேற சிறந்த பணியாற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

திரு சி. ஆறுமுகம் அவர்களின் அனுபவம்

இராமநாதபுரம் மாவட்டம் என்றாலே விளைவுகுறைந்த மாவட்டம் என்று கருதிவரும் எண்ணத்தை மாற்ற ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த மடவார்விளாகம் பகுதியில் வசிக்கும் திரு ஆறுமுகம் என்பவர் விவசாய இலாகா வோடு கடந்த இரண்டாண்டுகளாகவே தொடர்பு கொண் டுள்ளார். நெல் விளைச்சலில் பிரமிக்கத் தக்க மகசூலை விளைவித்துக் காட்ட வேண்டுமென்ற கருத்துடன் மாவட்ட அளவில் நடைபெறவிருந்த நெல் பயிர் விளைச்சல் போட்டியில் ஒருபோட் டியாளராகச் சேர்ந்து தமது வயலை விவ சாய இலாகாவின ரால் அவ்வப்போது கூறும் யோசனையு டன் பண்படுத்தி, உர மிட்டுவிதைவிதைத்து பயிர்ப் பாதுகாப்பு முறைகள் அனுஷ் டித்து நட்ட பின் வேலைகள் முடித்து இராமநாதபுரம் மா வட்டத்திலே யாரும் காணாத ஒரு புதிய விளைச்சலை செய்து காட்டியுள்ளார். ஏக்கருக்கு 3,240 கிலோ விளைச்சல் செய்துள்ளமை அவரது ஒரு சிறந்த படைப்பாகும்.

சி. ஆறுமுகம்

மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட நீதிக்குழுவினர் களின் முன்பாக அறுவடை ஆரம்பமாகி மகசூல் கணக்கிடப்பட்டது. இச்சிறப்பு மகசூல் கண்ட திரு ஆறு முகம் 1965–66-ம் ஆண்டில் மாகாண அளவில் நடக்க விருக்கும் நெல் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ள இப்பொழுதிருந்தே ஆக்க வேலையில் ஈடுபட் டுள்ளார்.

இப்பெரும் மகசூலைப் பெற திரு ஆறுமுகம் அவர்கள் கையாண்ட முறைகளும், ஏக்கருக்கு ஆன மகசூல் மற்றும் செலவு விபரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கோ. 2 நெல்லை 2–9–64-ம் தேதி விதைத்து, 3–10–64-ல் நடவு செய்து, 17–2–65-ம் தேதி அறுவடை செய்யப்பட்டது.

பூமியைப் பக்குவப்படுத்துதல் :—

நாற்றங்கால்—விதையும் விதை விதைத்தலும்.

		ரூ.பை.
1.	8 செண்ட் நிலத்தை 4 முறை உழவு செய்து வரப்பு எடுத்துக் கட்டுதல், மட்டப்படுத்துதல் உள்பட.	2·50
2.	உரம்.—5 கட்டு பசுந்தழை உரம்	2·50
	2 வண்டி தொழு உரம்	6·00
	2 கிலோ அமோனியம் சல்பேட்	0·70
3.	விதை.—20 கிலோ கோயம்புத்தூர் 2 விதை ரகம் கிலோ 1-க்கு 50 பை வீதம்.	10·00
4.	பயிர் பாதுகாப்பு—	
	2 கிலோ பி. எச்.சி. 10 சதம்	0·80
	$1\frac{1}{2}$ அவுன்ஸ் செரஸான்	0·15
	மொத்தம் ..	22·65

	ரூ.பை.
2. நடவுக்குப் பூமியைப் பக்குவப்படுத்துதல்	
உழவிடுதல்—	
நான்கு தடவைகள் உழவு செய்ய எக்கர் 1க்கு ரூ. 7 வீதம் 8 எக்கருக்கு.	56·00
வரப்பு எடுத்துக் கட்டுதல், கட்டப்படுத்தல் உள்பட.	8·00
3. உரமும் உரமிடுதலும்:	
24 வண்டி தொழு உரம், வண்டி 1-க்கு ரூ. 3 வீதம்.	72·00
52 கட்டு பசுந்தழை உரம், கட்டு 1–க்கு 50 பைசா வீதம்.	26·00
100 கிலோ சூப்பர் பாஸ்பேட், கிலோ 1–க்கு 22 பைசா.	22·00
86 கிலோ யூரியா, கிலோ 1–க்கு 64 பைசா வீதம்.	55·04
தோல் பதனிடுமிடத்தில் கிடைக்கும் கழிவுப் பொருள் 8 மூட்டைகள் (மூட்டை 1–க்கு ரூ. 8 வீதம்.)	64·00
தழை மிதித்தல், உரமிடல் உள்பட.	22·50
4. நடுதலும் நட்டபின்னும்:	
1. நாற்றுப்பிடுங்கல் முதல் நடவு முடிய 15 பெண்கள், நபர் 1–க்கு ரூ. 1·25 வீதம்.	18·75
2. களை எடுத்தல், மிதித்து விடல் உள்பட (5 தடவை).	30·00
5. பயிர்ப் பாதுகாப்பு:	
நட்டு முடித்த 21–வது நாளில் பி.எச்.சி. 10 சதம் 10 கிலோ தூவுதல், கிலோ 1–க்கு 40 பைசா.	4·00
நட்டு முடித்த 40 நாளில் பாரத்தியான் மருந்து தெளித்தல் (புட்டி 1–க்கு 3·50 வீதம்.)	3·50
90–வது நாளில் பாரத்தியானும் பூஞ்சாண மருந்தும் கலந்து தெளித்தல்.	5·10
பயிர்பாதுகாப்பு கூலி	4·00
6. தண்ணீர் பாய்ச்சுதல்:	25·00
(கிணற்றிலிருந்தும் கண்மாயிலிருந்தும் தண்ணீர் பாய்ச்சப்பட்டது).	25·00
7. அறுவடை:	
1. அறுவடை செய்ய 12 பெண்களும் 6 ஆண்களும் (ஆண் 1–க்கு ரூ. 4, பெண் 1–க்கு ரூ. 2) தூற்றுதல், சுத்தம் செய்தல் உள்படி.	48·00
2. மாடு விடுதல் 6 ஜோடிகள், ஜோடி 1-க்கு ரூ. 2 வீதம்.	12·00
மொத்தம் ..	495·00
மொத்தம் கூடுதல் ..	518·54
8. மகசூல்:	
1. 3,240 கிலோ நெல், கிலோ 1-க்கு 50 பைசா வீதம்.	1,620·00
2. 4 வண்டி வைக்கோல், வண்டி 1–க்கு ரூ. 40 வீதம்.	160·00
ஆக மொத்தம் ..	1,780·00

லாபம்

மொத்தம் வரவு ..	1,780·00
மொத்த சாகுபடி செலவு ..	518·54
லாபம் ..	1261·46

குறிப்பு:—திரு. ஆறுமுகம் அவர்கள் தொழு உரம், பசுந்தழை உரம் ஆகியவற்றை தமது சொந்தத்திலேயே தயார் செய்துள்ளார். சாகுபடி செலவு விபரத்திற்காகக் கணக்கிடப்பட்டுள்ளது.

பிழைத் திருத்தம்

1965-ம் வருடம் ஆவணி இதழில் வெளியிடப்பட்ட "நீலகிரியில் மண்வளப் பாதுகாப்பு முறைகளால் விவசாயிகள் பெற்ற நன்மைகள்" என்ற கட்டுரையின் ஆசிரியர் டாக்டர் மந்தரமூர்த்தி, B.Sc. (Ag.), M.Sc. (Calif.), P.HD. (Mich. St.), என்பதை டாக்டர் கிருஷ்ண மூர்த்தி, B.Sc. (Ag.), M.Sc. (Calif.), P.HD. (Mich. St.) என்று திருத்திக் கொள்ளுங்கள். இதே இதழில் "ஆலம்பாடி" என்ற கட்டுரையின் ஆசிரியர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி என்ற பெயரை மாற்றி டாக்டர் மந்தர மூர்த்தி, கால்நடை பராமரிப்புத் துறை நெறியாளர் என்று திருத்திக் கொள்ளுங்கள்.

[5-ம் பக்கம்—தொடர்ச்சி]

இந்த அடிப்படையில் பார்க்கும்போது, மதுரையில் தொடங்கப்பட்டுள்ள வேளாண்மைக் கல்லூரி மிகவும் முக்கியமானதாகும். பெரியாற்று பாசனத்தின்கீழ் உள்ள மதுரைப் பகுதியில், ஒத்தக்கடை அருகே இக்கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரி மதுரைக்கு மட்டுமின்றி தென்பகுதி மக்கள் அனைவருக்குமே மிகவும் உதவியாக இருக்கும் என உறுதியாகக் கூறலாம்.

வேளாண்மையில் நவீன முறைச் சாகுபடிகளைக் கடைப்பிடித்தல் முதலியவற்றின் பயனை உழவர் பெருமக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். இதனால் அறிவியலை மேலும் மேலும் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணமும், அவசியமும் பெருகி வருகின்றது. மதுரையில் வேளாண்மைக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டதன் மூலம் தமிழகத்தில் வேளாண்மைக் கல்வி மேலும் முன்னேற்றம் பெற வாய்ப் பேற்பட்டுள்ளது. வேளாண்மையில் ஆராய்ச்சிகள் நடத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க 'மதுரை வேளாண்மைக் கல்லூரி' மேலும் வழியமைக்கும் என்பதில் ஐயமில்லை.

தஞ்சை தீவிர சாகுபடித் திட்டத்தில் குறுவை நெல்லில் இரட்டிப்பு விளைச்சல்

[பி. பரதன், டி. கணபதி—(தீவிர சாகுபடித் திட்டம்)—செய்தித்துறை, தஞ்சாவூர்.]

திரு சிங்கப்பெருமாளும் ஆடுதுறை 27 நெல்பயிரும்

தீவிர சாகுபடித் திட்டம் தஞ்சாவூர் ஜில்லாவில் 1960–ல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. விவசாய உற்பத்தியைப் பெருக்கி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது இத் திட்டத்தின் முக்கிய நோக்கம். இத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வேண்டிய உற்பத்தி பொருள்களும் கடன் வசதியும் தொழில் நுணுக்க உதவியும் அளிக்கப்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் சாகுபடியாகும் முக்கியமான பயிர்நெல். ஜூன் முதல் செப்டம்பர்–அக்டோபர் வரை சாகுபடி செய்யப்படும் நெல் பயிருக்கு குறுவை என்றும், ஜூலை முதல் பிப்ரவரி வரையில் சாகுபடி செய்யப்படும் ஒருபோக பயிருக்கு சம்பா என்றும், குறுவைக்குப்பின் சாகுபடி செய்யும் பயிருக்குத் தாளடி என்றும் பெயர்.

தஞ்சாவூரில் குறுவை சாகுபடி 3 மாத காலத்தில் முடிகிறது. குறுவையில் பயிர் விளைந்து சாய்ந்து விடுவதால் மழையால் அடிபட்டு விவசாயிகளுக்கு பெரு நஷ்டம் ஏற்படுகிறது. மேலும் இப்பொழுது சாகுபடி செய்யப்படும் குறுவை அதிக உரத்தைத் தாங்காது. ஆகவே, அதிக அளவு உரத்தைத் தாங்கக்கூடியதும் சாய்ந்து விழாததுமான ஒரு ரகம் விவசாய இலாகாவினரால் ஆடுதுறையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த ரகத்தின் பெயர் ஜப்பானிகா இண்டிகா என்று சொல்லப்படும் ஆடுதுறை 27. இது ஜப்பான் வகைகளுடனும் நம் கிச்சிலி சம்பாவிற்கும் ஒட்டு சேர்த்து விருத்தி செய்யப்பட்டதாகும். இதன் வயது 105 நாட்கள் தான். இந்த ரகம் தஞ்சாவூர் ஜில்லாவில் குறுவை சாகுபடிக்கு ஏற்றது. மேலும் இந்த ரகம் அதிக உரத்தைத் தாங்கக் கூடியதால் இப்பொழுது கிடைப்பதைப்போல் இரண்டு மடங்கு விளைச்சலைக் கொடுக்கிறது.

ஆடுதுறை 27 நெல்லை 1964–ம் ஆண்டு குறுவை சாகுபடியில் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு சில விவசாயிகள் விவசாய இலாகாவினால் சிபாரிசு செய்யப்படும் முறைகளைக் கடைப்பிடித்து சாகுபடி செய்ததில் இரண்டு மடங்கு விளைச்சல் கிடைத்தது. இப்பொழுது சாகுபடி செய்து வரப்படும் ஆடுதுறை 20 குறுவைக்குப் பதில் இந்த ஆடுதுறை 27 நெல் சாகுபடி செய்யப்பட்டது.

திரு. சிங்கப்பெருமாள் அவர்கள் இந்த புதுரக நெல்லை அதிக உரமிட்டு சாகுபடி செய்து காண்பித்தவர்களில் ஒருவர் ஆவார். இவர் தஞ்சாவூர் ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டம் செயல்படும் அம்மாப்பேட்டை வட்டாரத்திலுள்ள அம்மாப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் ஒரு இளம் விவசாயி. பட்டதாரியும் கூட. இவர் தனக்கு சொந்தமான 30 ஏக்கரில் தானே சாகுபடி செய்கிறார். இந்த 30 ஏக்கரில், 25 ஏக்கர் குறுவை நெல் சாகுபடியும் மீதமுள்ள 5 ஏக்கரில் சம்பா சாகுபடியும் செய்கிறார்.

1964–ம் வருஷம் ஜூன் மாதத்தில் விவசாய விஸ்தரிப்பு அலுவலரும் கிராமசேவக்கும் அவரை அணுகி இந்த புதுரக நெல் சாகுபடி செய்யக் கேட்டுக்கொண்டபொழுது, திரு. சிங்கப்பெருமாள் இதற்கு உடன்பட்டார். அவருடைய 25 ஏக்கர் நிலத்தில் ஆடுதுறை 27 குறுவை நெல் சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆடுதுறை 27 நெல்பயிர்

விதையை இவர் அக்ரசான் மருந்துடன் கலந்தார். பின்னர் நிலத்தை நன்றாக உழுது தயார் செய்தார். நாற்றங்காலுக்கு தொழு உரம் எக்கருக்கு 10 டன் வீதம் போடப்பட்டது. விதைப்பதற்கு முன் 54 அடி நீளம் 8 அடி அகலமுள்ள செண்ட் பாத்திகளாகப் பிரித்து அவற்றில் விதை விடப்பட்டது. ஒரு எக்கருக்கு 18 கிலோ விதை தேவைப்பட்டது. ஆனால், சாதாரணமாக விவசாயிகள் ஒரு எக்கருக்கு 40 கிலோ விதை உபயோகிக்கின்றனர். இதனை 7 முதல் 8 செண்ட் நிலத்தில் நாற்று விடுகிறார்கள். இவ்விதம் குறைந்த பரப்புள்ள நிலத்தில் அதிகமான விதையை நாற்று விடுவதால், பயிர் நெடுக்கமாகவும், குத்து குத்தாகவும் முளைக்கின்றது. பயிர் நலிந்தும் வளர்கிறது. அவ்விதம் இல்லாமல் திரு. சிங்கபெருமாள் விவசாய இலாகாவினர் சொல்வதைப்போல் நாற்று விட்டதால், நாற்றங்கால் நன்றாக வளர்ந்தது. நாற்று தடிப்பாகவும், செழுமையாகவும் இருந்தது.

இவர் நடவு வயலில் தழைக்காக கொளுஞ்சி போட்டிருந்தார். ஆனால் கொளுஞ்சி அவ்வளவு அதிகமாக இல்லை. ஒரு எக்கருக்கு 10 வண்டித் தழை போட வேண்டும். ஆனால் அவருடைய நிலத்தில் எக்கருக்கு 5 வண்டிதான் தழை இருந்தது. இம்மாதிரி எக்கருக்கு 5 வண்டி தழை குறைந்ததற்கு, இவ் விவசாயி எக்கருக்கு 6 வண்டி தொழு உரம் போட்டார். நன்றாக வயலை ஆறு தடவைகள் உழுதார். நன்றாக சேர் கலக்குவதற்கும் தழையை அமுக்குவதற்கும் பர்மீஸ் சட்டன் உபயோகித்தார்.

நடவு தினத்தன்று கடைசி உழவில் எக்கருக்கு 100 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், நடவுக்கு முன் எக்கருக்கு யூரியா 23 கிலோவும் போட்டு வரிசை வரிசையாக நடவு செய்யப்பட்டது. நடவில் இரண்டு நாற்றுகள் வீதம் நடப்பட்டது. இந்த நாற்றைப் பறித்து நட ஒரு வாரத்திற்கு முன் பாலிடால் மருந்தடிக்கப்பட்டது.

வரிசைகளுக்கிடையில் 8 அங்குல இடைவெளியும், பயிருக்குப்பயிர் 4 அங்குல இடைவெளியும் விடப்பட்டது. பின்னர் நட்ட 15–ம் நாள் ஒருமுறை 'இடைக்கிளரியினாலும்' இடை உழவு செய்யப்பட்டது. மீண்டும் நட்ட 30–ம் நாள் ஒருமுறை இடை உழவு செய்யப்பட்டது. இப்பொழுது இடை உழவுக்கு முன் அமோனியம் சல்பேட் எக்கருக்கு 50 கிலோ வீதம் மேலுரமாக இடப்பட்டது. பின்னர் இடை உழவு செய்யப்பட்டது.

இந்த சமயம் பயிர் நன்றாக தூர்கட்டி செழுமையாக இருந்தது. பூச்சி எதுவும் தாக்காமலிருக்க டி. டி. டீ. 5% பி. எச். சி. 10% மருந்தையும் சமமாகக் கலந்து எக்கருக்கு 10 கிலோ வீதம் தூவப்பட்டது.

இப்பயிருக்கு அதிக உரம் போட்டாலும், பயிர் சாயவில்லை, பின்னர், இவர் செப்டம்பர் மாதத்தில் அறுவடை செய்தார். விதை விட்டதிலிருந்து அறுவடை வரைக்கும் 105 நாட்கள்தான் அதன் வயது. இவர் 25 எக்கரிலும் அறுவடை செய்து பார்த்ததில் சராசரி எக்கருக்கு 5,000 ராத்தல் கிடைத்தது. இதனை பக்கத்திலுள்ள விவசாயிகள் பார்த்து ஆச்சரிய மடைந்தனர். சாதாரணமாக இங்குள்ள விவசாயிகளின் சராசரி விளைச்சல் எக்கருக்கு 2,000 முதல் 2,500 ராத்தல் வரைதான் கிடைக்கும். ஆகவே, இந்தப் புதுரக நெல் ஆடுதுறை 27 சாகுபடி செய்ததில் இரண்டு மடங்கு விளைச்சல் கிடைத்தது. இந்த வருஷம் அதாவது 1965–ல் பெரும்பாலான விவசாயிகள் திரு. சிங்கப்பெருமாளின் விளைச்சலைப் பார்த்து புதுரக நெல்லான ஆடுதுறை 27 நெல் விதையை உபயோகிக்கின்றனர். இதற்கு கூடுதலான உரமும் உபயோகிக்கின்றனர்.

இவ்விதம் தீவிர சாகுபடித் திட்டத்திலுள்ள தஞ்சை ஜில்லா விவசாயிகள் ஒவ்வொருவரும் குறுவையில் ஆடுதுறை 27 நெல்லை உபயோகித்து, தீவிரசாகுபடி முறைகளைக் கையாண்டு இரண்டு மடங்கு விளைச்சலை பெறமுடியும்.



ஆடுதுறை 27 நெல்பயிரை விவசாயிகள் பார்வையிடுதல்

தென்னந்தோப்பு பராமரிப்பு

அக்டோபர்—நவம்பர் மாதக் குறிப்பு.

குருத்து வண்டு தாக்குதல் குருத்தழுகல் நோய் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். குருத்து நோய்க்கு துத்த கலவையின் பசையையும் துத்த கலவையும் முன்கூறியது போல் உபயோகித்தல் வேண்டும். குருத்து வண்டு தாக்குதலுக்கு வண்டு எடுக்கும் ஊக்கினால் எடுத்துவிட்டு பி.எச்.சி. 10 சதவீதத்தை மணலுடன் கலந்து முன்கூறியது போல் மட்டை இடுக்குகளில் தூவ வேண்டும். டிசம்பர் மாதத்தில் பெய்யும் கனத்த மழைக்கு பிறகு கலப்பு உரம் நம்பர் 3-ஐ ஜூன்—ஜூலை மாதங்களில் வைக்காத தோப்புகளுக்கு வைக்கலாம். ஜூன்–ஜூலை மாதங்களில் பாதி அளவு உரம் வைத்த தோப்புகளில் மீதி பாதி அளவு உரத்தை இம்மாதத்தில் வைக்கலாம்.

தோப்பை நமக்கு உழுது புல் பூண்டு இல்லாதவாறு செய்து மண் திருப்பத்தை உண்டாக்குதல் வேண்டும்.

அதிசயக் கிழங்கு-கோவையில்!

எஸ். ராசரத்தினம்—ம. பகவன் தாஸ், கோவை வேளாண் கல்லூரி.

உருளைக்கிழங்கு இந்தியாவில் மலைப்பிரதேசங்களி லேயே அதிகம் பயிர் செய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் முக்கியமாக நீலகிரி மலை பிரதேசத்தில்தான் அதிகமாக இந்தக் கிழங்கு செழித்தோங்கி வளருகிறது. நல்ல மழையுடன் (சுமார் வருஷத்திற்கு 60"–க்கு மேல்) கூடிய மலைப் பிரதேசத்தில்தான் சாதாரணமாக உருளைக்கிழங்கு நன்கு வரும். சமீபத்தில் நீலகிரி பிரதேசத்தில் ஒருவித பூஞ்சக் காளான், உருளைக்கிழங்கு செடிகளை மிகவும் நாசம் செய்துவிட்டதை யாவரும் அறிந்ததே.

அதனால் சமவெளியில், சுமாரான மழையை உடைய இடங்களில் உருளைக் கிழங்கைப் பயிரிடவேண்டி கோவை விவசாயக் கல்லூரியில் முயற்சிகள் செய்யப்பட்டன. இம் முயற்சியினால் ஊட்டியில் விழுந்த பூஞ்சக் காளான் நோயிடமிருந்து உருளைக் கிழங்கைத் தப்பவைக்கலாம் என்ற நோக்கத்தோடு 1962–ஆம் வருடம், சிம்லாவில் உள்ள உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து சில வகை சமவெளி வகைக் கிழங்குகளைத் தருவித்து கோவை யில் தீவிர ஆராய்ச்சி துவக்கப்பட்டது. முதல் வருடமே ஏக்கருக்கு சுமார் 3,000 கிலோவுக்கு மேலாக மகசூல் கிடைத்தது.

சமவெளிகளில் வளரும் உருளைக் கிழங்குகளில் எச். பி. (H.B.) எனப்பட்ட வகையில் 12 A ரகங்களும், எச். சி. (H.C.) எனப்பட்ட வகையில் 245 விதமான ரகக் கிழங்கு களையும் ஆராய்ந்து எடுத்ததில் எச். பி. 1699, H.B. 793, C.D. எனப்பட்ட மூன்று வகைக் கிழங்குகள் ஏக்கராவிற்கு 5,000 கிலோவுக்கு மேற்பட்ட மகசூல் தந்தன என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் இந்த கிழங்குகள் நீலகிரி மலைப் பிரதேசத்தில் கிடைக்கப்பெறும் கிழங்கு களுக்கு எந்த விதத்திலும் தரம் குறைந்தவையல்ல என்றும் அறியப்பட்டது. மகசூலிலும், உருவத்திலும், சமையலுக்கும், மற்ற மலைப் பிரதேச கிழங்குகளுக்கும் இந்த H.B. சமவெளிக் கிழங்குகளுக்கும் நிறைய ஒற்றுமை இருந்தன.

இந்த சமவெளி உருளைக் கிழங்கு வகைகள், தற்போது கோவை விவசாய கல்லூரியில் ஆறுவது தடவையாக பயிர் செய்யப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக ஆளி யார் அணைக்கட்டு விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும், ஊட்டி நஞ்சநாடு விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும், மற்றும் ஓசூர் முதலான இடங்களிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உருளைக்கிழங்கை நல்ல பக்குவத்துடன் சமவெளியில் சாகுபடி செய்வது இதுவே முதன்முறை. ஆதலால் தர மான அளவுக்கு உரம், ஏற்ற சாகுபடிகாலம் மற்றும் இதுபோன்ற ஆராய்ச்சிகள் தற்சமயம் நடக்கின்றன. ஆராய்ச்சிகளின் முடிவுக்குப்பின் H. B. 1699 போன்ற, நல்ல மகசூலைக் கொடுக்கும் கிழங்கு வகைகளை தமிழ் நாட்டில் உள்ள விதைப் பண்ணைகள் மூலமாகவோ அல்லது விவசாய பெருமக்களின் நிலங்களிலோ வெவ் வேறு பிராந்தியங்களில் எப்படி வருகின்றன என்று கணக்குப் பார்த்தப்பின் ஏற்ற கிழங்குகளை, விவசாயத் திற்கு வெளியிடப்படும்.

சாகுபடி குறிப்புகள்

1. **காலம்.**—நல்ல மகசூல் கிடைக்கும் காலம் புரட் டாசி, ஐப்பசி முதல் மாசி—பங்குனி வரை இதைத் தவிர சித்திரை—ஆவணி பட்டத்திலும் போடலாம். சரியான பருவ காலம் புரட்டாசி பட்டத்தில் விதைப்பதே முறை. அடுத்த புரட்டாசி வரையில் விதைக் கிழங்குகளைப் பாதுகாப்பது கடினமாகும். சித்திரைப் பட்டத்தில் மறுபடியும் சிறிது கிழங்குகளை நட்டு, பருவ காலத்திற்கு வேண்டிய விதைக் கிழங்குகளை எடுத்துக்கொள்வது நல்லது. புரட்டாசி பட்ட மகசூல் மாசி—பங்குனியில் முடிவடையும். இது குளிர் கால பருவம். அடுத்த பருவம் சித்திரையில் துவங்கி ஆடி மாதத்தில் முடியும். இது கோடைப்பருவம்.

2. **நிலம்.**—பொதுவாக சிவப்புக் களிமண் பிரதேசங்க ளிலும் வண்டல் பூமிகளிலும் உருளைக் கிழங்கு நன்கு வரும். கரிசல் பூமியோ அல்லது கல்லாங் காடுகளோ இதற்கு ஏற்றவை அல்ல.

3. **உழவு.**—தேர்ந்தெடுக்கப்பட்ட பூமியை நன்கு மூன்று முறை உழுதல் அவசியம். நிலம் நன்கு பக்குவ பட்ட பின் கட்டிகளை உடைத்து சமமாக வைத்தல் அவசி யம்.

தொடர்ந்து கடைசிமுறை உழவின்போது ஏக்கருக்கு 100 டன் மாட்டு எருவைபோட்டு நன்கு பூமியில் கலக்க வேண்டும்.

இதன் பிறகு நிலத்தை பார் கலப்பையின் மூலமாக 2 அடிக்கு ஒரு பாராக பிரித்துப் போடவேண்டும். பார் களை செம்மையாக்கி நீர் பாய வாய்க்கால்களைப் போட வேண்டும்.

4. **இரசாயன உரமிடுதல்.**—ஒரு ஏக்கருக்கு தேவையான இரசாயன உரங்கள் கீழ்வருமாறு (சுமார் நஞ்சநாடு மிக்சர் உர அளவுக்கு).—

	கிலோ.
1. அம்மோனியம் சல்பேட் (21%)	200
அல்லது	
யூரியா (46%)	90
2. சூப்பர் பாஸ்பேட் (16%)	700
3. பொட்டாஷ் (60%)	70

இந்த உரங்களை ஒன்று சேர்த்துக் கலக்கி, விதைக்கு முன் சால்களில் போடவேண்டும்.

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 40404-64 தேதி 21-4-64 உத்தரவின்படி

1964-65 "ரேட் கான்ட்ராக்ட்" திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட

ஸ்பிரேயர்கள்



'கேடார்'
அசைப்பு ஸ்ப்ரேயர்



'மாருதி'
ஃபுட் ஸ்ப்ரேயர்



'மாருத்'
கையழுத்த ஸ்ப்ரேயர்



'கேடார்-கோஃபி'
அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள் :

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

மார்வே ரோடு, மலாடு, பம்பாய்–64.

தமிழ்நாடு, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,

75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், தபால் பெட்டி நெ. 539, பெங்களூர்-2.

5. விதைப்பு.—விதைப்புக்கு சுமார் 800—900 கிலோ கிழங்குகள் ஒரு ஏக்கருக்கு வேண்டியதாயிருக்கும். நல்ல பெரிய கிழங்குகளை எடுத்து ஒன்றை நான்காக வெட்டி நடலாம். பொதுவாக சிறு கிழங்குகளாகவே 62 விதைக் கென்று பொறுக்கி வைத்தல் நலம்.

விதைக் கிழங்குகளை சாலில் போட்ட உரத்தின் மேலேயே 6'' அல்லது 9'' தூரத்திற்கு ஒன்ருக வைத்துக்கொண்டே போகவேண்டும். பிறகு பக்கத்தில் இருக்கும் பாரில் உள்ள மண்ணை சாலில் போட்டு மூடவேண்டும். இப்போது பார் சாலாகவும் சால் பாராகவும் மாறி நிற்கும்.

விதைத்த பிறகு பார்களை செம்மைப்படுத்தி, தண்ணீர் பாய்ச்சவேண்டும். சமவெளிக் கிழங்குகள் முளைக்க சிறிது காலமாகும். அதனுல் பரவாயில்லை. கிழங்குகள் முழுவதும் முளைக்கும்வரை பூமியில் ஈரமாய் இருக்கும்படி பார்த்துக்கொள்வது நல்லது.

6. நீர்ப்பாசனம்.—உருளைக்கிழங்கு சுமார் 120 நாள் பயிர். அதனுடைய காலத்திற்கு 5 அல்லது 6 தண்ணீர் கட்டினுல் போதுமானது. அதிகமாக தண்ணீரைத் தேக்கிக் கட்டக்கூடாது.

7. களைவெட்டு முதலியன:—உருளைக் கிழங்கு, பூமியில் ஊரும் கிழங்கு வகையைச் சேர்ந்ததினுல், கிழங்குகள் முளைத்து சுமார் 45–50 நாட்கள் கழித்து மண்ணை நன்ருக செடிகளுக்கு அணைத்துக் கொடுக்கவேண்டும். சுமார் 2 அல்லது 3 கைக் களைகள் எடுப்பது நல்லது. கிழங்குகள் பூமிக்கு வெளியில் தெரியக்கூடாது.

8. மருந்து அடித்தல்.—பாலிடாலுடன் டையதேன் (dia thane) என்கிற பூஞ்சக்காளான் மருந்தையும் சேர்த்து சுமார் மூன்று முறைகள் அடிப்பது நல்லது. முதல் முறை செடிகள் முளைத்து ஒரு மாதத்திற்குபின் அடித்தலும், பிறகு மாதம் ஒருமுறை இதைத் தொடர்ந்து செய்தலும் பலனைத் தரும்.

9. அறுவடை.—குத்தலி என்கிற மூன்று முள் உள்ள மண் வெட்டியில் கிழங்குகளை சேதமடையாமல் தோண்டி எடுக்கவேண்டும். கடப்பாரை மண்வெட்டியாலும் இதைச் செய்யலாம். கிழங்குகளை நன்ருக ஆறவைத்து மூட்டைப் பிடிக்கவும்.

விற்பனைக்கான கிழங்குகளைத் தனியாகவும், விதைக் கேற்ற கிழங்குகளைத் தனியாகவும் பிரித்து வைத்துக் கொள்வது நல்லது. ஏக்கருக்கு சுமார் 4,500–5,000 கிலோ கிழங்குகள் கிடைக்கும்.

10. லாபம்.—மொத்தமாக ஏக்கருக்கு சுமார் 500–600 ரூபாய் வரை செலவு ஆகலாம். நன்ருக பயிரைக் கவனித்தால் ஏக்கருக்கு சுமார் 5,000 கிலோ கிழங்குகளுக்கு மேலேயே கிடைக்கும். இதில் விதைக்க சுமார் 800–900 கிலோ ஒதுக்கிவைத்து விட்டாலும், மீதி சுமார் 4,200–4,100 கிழங்குகள் மிஞ்சும். ஒரு கிலோ 75 பைசா வீதம் ஏகராவிற்கு சுமார் ரூ. 2,075—ரூ. 2,150 வரை கிடைக்கும். செலவு போக லாபம் சுமார் ரூ. 1,550 வரை கிடைக்கக்கூடும்.

இந்த அதிசய கிழங்கு வெளிவரும் பொன்னுன நாளை எதிர் பாருங்கள் !

ஸ்டார் பிராண்டு

FERTILISERS STAR BRAND SHAW WALLACE & CO. LTD.

உரங்களே உங்கள்
சிறந்த முதலீடு

SHAW WALLACE

ஷா வாலஸ் & கம்பெனி லிமிடெட்
தபால் பெட்டி எண்: 14, சென்னை-1.



SHB3/SW/F/72 A-TAM

ருசியன் பருத்தி (பி. ஆர். எஸ். 72)

வெ. க. பழனியாண்டி, கோ. நம்மாழ்வார், ப. அ. முஹமது இப்ருஹீம்,
மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி.

"குடி உயரக் கோல் உயரும்" என்பது பழமொழி. பாட்டாளியின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி. அதனால் ஆராய்ச்சியாளர்களின் பலதரப்பட்ட முயற்சியும் உழவன் பெறுகின்ற ஊதியத்தைப் பெருமளவு உயர்த்துவதையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஆடை மனிதனுக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு பாரதத்திற்குப் பருத்தி முக்கியம். ஆதலால் பருத்தி விளைவை உயர்த்துவதற்குப் பல வழியிலும் முயற்சிக்கிறோம். அந்த முயற்சியில் ருசியன் பருத்தி நல்லதொரு சாதனை.

கிடையாது. ஆதலால் நிலத்தில் விதைகள் ஊன்றும் போது மிகவும் நெருக்கமாக விதைப்பதால் விளைவு பாதிக்கப்படுவதும் இல்லை. மாறாக, செடிகளின் எண்ணிக்கை கூடுவதால் ஹக்டர் விளைவும் கூடவே செய்கிறது. மற்றொன்று, இது குறுகிய காலத்தில் அறுவடைக்கு வருவதால் நீண்ட காலப் பருத்திகளைத் தாக்கும் பலவகைப் பூச்சிகளின் தாக்குதலில் இருந்து தப்புகிறது.

கோவில்பட்டி சூழ்நிலையில் ருசியன் பருத்தி விளைவு எப்படி இருக்கிறது என்பதை சோதிக்க வேண்டி முன்னோடிச் சோதனையாக முயற்சி தொடங்கிற்று. அடி உரமாகக் கொடுக்கப்பட்ட உரங்களும் அவற்றின் அளவுகளும் பின்வருமாறு :—

1. மக்கிய உரம் ஹக்டருக்கு 25 டன்கள். [எக்கருக்கு 20 வண்டிகள்]

2. சூப்பர் பாசுபேட்டு : ஹக்டருக்கு 105 கிலோ. [16·81 கிலோ மணிச் சத்து.]

3. மியூரியேட் ஆப் பொட்டாஷ் : ஹக்டருக்கு 28 கிலோ [16·81 கிலோ சாம்பல் சத்து]

ருசியன் பருத்தி

ருசியன் பருத்தியின் முக்கியமான சில பண்புகள் பின்வருமாறு :—இதன் குறுகிய பயிரிடும் காலம் பல வழிகளில் நன்மை பயக்கிறது. பயிரின் காலம் குறையும்போது அதற்குத் தேவைப்படும் பணமும் குறைகிறது ; உழைப்பும் குறைகிறது. அதனால் ஊதியம் நிகர இலாபம் உயருகிறது. தஞ்சை மாவட்ட விவசாயிகள் நஞ்சைத் தரிசில் பயிரிட்டு உபரி வருமானம் பெறுவதற்கு இது உகந்த ஒரு பருத்தி ஆகும். நீண்ட காலப் பருத்தி பயிராகும் இடங்களிலும் ருசியன் பருத்தி பயிரிட்டால் அதற்குப்பின் வேறு ஒரு பயிர் வளர்ப்பதற்குக் காலம் கிடைக்கிறது. ருசியன் பருத்தியின் மற்றொரு பண்பு குறிப்பிடத் தகுந்தது. எந்த சூழ்நிலையிலும் இவ்வினப் பருத்தி கிளைகள் விட்டு வளர்வது

மக்கிய உரம் இடப்பட்ட பிறகு மூன்று உழவுகள் கொடுத்து நிலம் புழுதியாக்கப்பட்டது. இரண்டு பார்களுக்கு இடையில் 61·00 சென்டி மீட்டர் இடைவெளி விட்டு பார்கள் எடுக்கப்பட்டன. பார்களின் சரிவில் சூப்பரும் பொட்டாசும் இட்டு மூடப்பட்டன.

இருபத்தைந்து கிலோ விதை ஒரு ஹக்டர் விதைப்பதற்குப் போதுமானது. வந்தபின் காத்தலைவிட வருமுன்பே காப்பது மேல். விதைப்பதற்குமுன் அக்ரசான் ஜி.என். மருந்தை விதையுடன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து வீதம் கலக்கப்பட்டது. இது "கருங்கிளை" நோய் போன்ற அழிவுகளுக்குத் தடுப்பு ஆகும். பார்களின் ஒரு பக்கத்துச் சரிவில் (உரம் இடப்பட்ட பக்கம்) விதைகள் வரிசையாக நடப்பட்டன. குழிக்கு மூன்று விதைகள்

வீதம் 15·2 செண்டி மீட்டர் இடைவெளியில் ஊன்றப்பட்டன; விதைப்பு முடிந்ததும் நீர் பாய்ச்சப்பட்டது. விதை முளைப்பதற்கு உயிர்த் தண்ணீர் மூன்றும் நாள் விடவேண்டியது முக்கியம் ஆகும். நீர்ப் பாய்ச்ச வேண்டிய கால இடைவெளியை நிரந்தரமாக்க முடியாது. மழை பொழிவதையும் மண் ஈரத்தையும் சீர்தூக்கியே நீர் பாய்ச்சுதல் வேண்டும்.

விதைத்து பதினைந்து நாட்களுக்குப்பின் செடிகள் மூன்றிலிருந்து இரண்டாகக் கலைத்துவிடப்பட்டன.

ருசியன் பருத்தியை அதிகமாகத் தாக்குவது தத்துப்பூச்சி. இதைத் தடுக்க 15 நாட்களுக்கொருமுறை பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. முதல் இருமுறைகளில் செவின் பத்து சதத் தூள் தூவப்பட்டது. அடுத்த முறை செவின் 50 சதமும், மறுமுறை என்டிரின் 0.02 சதமும், கடைசி முறை பாலிடால் 0.025 சதமும் தெளிக்கப்பட்டன. களை வளர்ந்தபோதெல்லாம் களை நீக்கப்பட்டது.

புன்செய், சோதனைக்காக வேண்டி 4.2 சென்டு பரப்பளவு உள்ள பாத்திகள் மூன்றாகப் பகுக்கப்பட்டது. மூன்று பாத்திகளிலும் முறையே ஹக்டருக்கு 44·84 கிலோ, 67·26 கிலோ, 89·68 கிலோ தழைச் சத்து வீதம் யூரியா உப்பு வைக்கப்பட்டது. இதில் பாதியளவு விதைத்த முப்பதாம் நாளும் மீதியளவு 45-ம் நாளும் வைக்கப்பட்டன. ஒவ்வொரு பாருக்கும் ஆகும் உர அளவு கணித்துக்கொண்டு செடிக்கு அருகில் உரம் வைத்து மண் அணைக்கப்பட்டது. உரம் வைத்ததைத் தொடர்ந்து நிலம் நிறைய நீர் பாய்ச்சப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

விதைத்து 40 நாட்களில் பருத்தி பூக்கின்ற பருவம் எய்திற்று. இவ்வளவு விரைவில் பூ மலர்வது ருசியன் பருத்திக்கே உரிய தனிக் குணம் ஆகும். எண்பதாம் நாள் முதன் முறையாகப் பருத்தி எடுக்கப்பட்டது. வாத்து முட்டை வடிவத்தில் இருந்த பெரிய காய்கள் வெடித்தன. செடியிலிருந்து பருத்தி எடுத்தலும் எளிதாக இருந்தது. மொத்தத்தில் சராசரி ஐந்து நாட்கள் இடைவெளிவிட்டு ஆறுமுறை பருத்தி எடுக்கப்பட்டது.

ஏறத்தாழ மூன்றரை மாதங்களில் (107 நாட்கள்) பருத்தி அறுவடை முடிந்தது. பருத்தி மாறுகள் புன்செயிலிருந்து நீக்கப்பட்டன. வழக்கமாகப் பிற இடங்களில் எல்லாம் இப் பருத்தியில் அறுவடை முடிவதற்கு முழுமையாக நான்கு மாதங்கள் ஆகின்றன என்று கண்டுள்ளார்கள். கோவில்பட்டியில் உள்ள கடுமையான கோடையின் காரணத்தால் மூன்றரை மாதங்களில் அறுவடை முடிந்தது என்று கொள்ளுதல் முற்றிலும் பொருந்தும். இதன் இழை நீளம் சற்று குறைவு (23 மி. மீட்டர்) என்றாலும் அறைவை சத வீதம் 36 சத வீதமாக இருக்கிறது. ருசியன் பருத்திக்கு மிகுந்த உரமிட்டால் தகுந்த விளைச்சல் தருகிறது. மேற்குறிப்பிட்ட சோதனையில் கிடைத்த விளைவு, செலவு, ஊதியம் முதலியவை பின்வருமாறு :—

எக்டர் நிலத்தில் ஆகும் பருத்தி விளைவும், பணச் செலவும் ஊதியமும்.

தொடர் எண்.	இடப்பட்ட யூரியா அளவு கிலோவில்.	பருத்தி விளைவு கிலோவில்.	குவிண்டால் பருத்தி ரூ. 14–00 வீதம் பருத்தி விலை.		செலவு.		ஊதியம்.	
			ரூ.	பை.	ரூ.	பை.	ரூ.	பை.
1.	97·5 [44·84 கிலோ தழைச் சத்து] ..	1,582	2,214	80	1,092	15	1,122	65
2.	146.25 [67.26 ,, ,,] ..	2,005	2,807	00	1,127	35	1,679	65
3.	195·00 [89·68 ,, ,,] ..	2,094	2,931	60	1,162	55	1,769	05

97.5 கிலோ யூரியா வைத்த பயிரைவிட 146.25 கிலோ யூரியா வைத்த பயிர் 557 ரூபாய் அதிக ஊதியம் தந்துள்ளது. ஆனால் 146.25 கிலோ யூரியா வைத்த பயிரைவிட 195 கிலோ யூரியா வைத்த பயிர் 89.40 ரூபாய் தான் அதிக ஊதியம் தந்திருக்கிறது. ஆதலால் ஹக்டருக்கு 146·25 கிலோ யூரியா (67.26 கிலோ தழைச்சத்து] போடுவதே அதிக இலாபகரமானது. அன்றி 195 கிலோ யூரியா வைப்பதுவும் இலாபத்தில் அன்றி இழப்பில் முடியாது என்பதும் மேலே கண்ட பட்டியலில் இருந்து பெறப்படுகிறது. குறுகிய காலத்தில் நிறைய வருவாய் தரக்கூடிய காரணத்தால் ருசியன் பருத்தி நமது விவசாயிகளின் வருவாய் உயர்வதிலும் நாட்டின் பொருளாதாரம் உயர்வதிலும் முக்கியமாகத் திகழ முடியும் என்று சொல்வது மிகையாகாது.

" குறுகிய பருவப் பருத்தி வளர்த்திடில் இலாபமே! என்பது
கூறுதல் இன்றியே எவர்க்கும் விளங்கிடக்கூடுமே! "

டாடா பைஸன் ராலீஸ்
பயிர் அபிவிருத்திக்குப் பணி
புரிகின்றது
TATA FISON RALLIS
TREE BRAND
FERTILIZERS AND PESTICIDES
SHBI-RF-86 TAM

கல்லுப்பட்டி இரும்புக் கலப்பை

நாட்டுக் கலப்பையால் உழுவதால் அது மண்ணைத்தான் கிளறுகிறது. ஒவ்வொரு வருடமும் ஒரே ஆழத்தில் உழுவதால் மேலே உள்ள சத்துப்பொருட்கள் பயிர்களால் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அடியில் உள்ள தாவர உணவுப் பொருட்கள் மேலே வருவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது. நாட்டுக் கலப்பை "V" வடிவத்தில் சால் அடிக்கிறது. ஒரு சாலுக்கும் மற்றொரு சாலுக்கும் இடையில் உழாத நிலம் ஏற்படுகிறது. களைகள், தூர்கள், புல் பூண்டு முதலியவைகள் மண்ணால் மூடப்படாமல் நிலத்திலேயே விட்டுவிடப்படுகின்றன. விதைப்பிற்கு நல்ல புழுதி உண்டுபண்ண நாட்டுக் கலப்பையால் பல தடவை உழவேண்டியதிருக்கிறது. ஒரு நாட்டுக் கலப்பை ஆறு மாதத்திற்குமேல் உழைப்பதில்லை. விலையும் மலிவாக இல்லை. ஒரு கலப்பை செய்ய ரூ. 10 ஆகிறது.

இரும்புக் கலப்பை மண்ணை வெட்டி எடுத்துப் புரட்டுகிறது. வெட்டப்பட்ட மண் இறக்கையை நோக்கி சென்று மேல்புறம் கீழாகவும், அடிப்புறம் மேலாகவும் கவிழ்கிறது; புரட்டப்பட்ட மண்ணில் பௌதிக, இரசாயன மாற்றம் ஏற்படுவதற்கும், நுண்கிருமிகள் தங்களுடைய வேலைகளைச் செய்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. காற்று, தண்ணீர், உஷ்ணம் போன்ற இயற்கை சக்திகள் புரட்டப்பட்ட மண்ணுடன் நன்றாகக் கலந்து வேலை செய்கின்றன. இரும்புக் கலப்பையால் உழவு செய்வதால் அடியிலுள்ள செடியின் ஆகாரப் பொருட்கள் மேலே கொண்டுவரப்பட்டு சூரிய உஷ்ணத்தினால் காய்ந்து செடிகளுக்கு எளிதாக கிடைக்கக்கூடிய நிலையில் பக்குவமடைகின்றன. இரும்புக் கலப்பை ஆழமாக உழுது புழுதி செய்வதால், வேர்கள் தாராளமாகச் சென்று [illegible] வளர்ந்து பலன் அளிக்கிறது.

களைகள், செடிகள், முதலியன மண்ணால் மூடப்பட்டு மக்கி நிலத்திற்கு அங்ககப் பொருள் அளிக்கின்றன. ஒரே அளவு ஆழம் உழுவதற்குத் தேவையான இழுப்பு சக்தி மரக் கலப்பையைக் காட்டிலும் இரும்புக் கலப்பையில் குறைகிறது.

கல்லுப்பட்டி கிராம விஸ்தரிப்புப் பயிற்சி நிலைய தொழிற்கூடத்தில் தயார் செய்யப்படும் இரும்புக் கலப்பை கீழ்காணும் அனுகூலங்களைக் கொண்டது. ஒரு ஜோடி நடுத்தர மாடுகள் இழுக்கக்கூடியது. மறு உழவுகளுக்கு லாயக்கான 8 அங்குல கலப்பையாகும்; விவசாயிகளின் தேவைகளுக்குத் தகுந்தபடி தயார் செய்யப்பட்டிருக்கிறது. ஏர்க்காலுடன் 30 கிலோ எடையுள்ள மலிவான கலப்பையாகும். இதனுடைய விசேஷத் தன்மை என்னவென்றால் நிலத்தைப் பொருத்து 4—6 அங்குல ஆழத்தில் 8 அங்குல சால் உண்டுபண்ணுகிறது. எல்லா பாகங்களும் உருக்கினால் செய்யப்பட்டது. நன்றாக உழைக்கக்கூடியது. கொழுவை கலப்பையிலிருந்து பிரித்து கிராமத்திலுள்ள கொல்லன் உலையில் காய வைத்துத் தட்டி சரிசெய்துகொள்ளலாம். கலப்பையின் மற்ற பாகங்கள் எல்லாம் பற்றவைக்கப்பட்டிருக்கின்றன.



1	B.P.S	10G	MOULD-BOARD
2	M S	1/4"	SHARE
3	M.S	1/4"	FROG
4	M S	3/8"	LAND SIDE
5	M S	1/2"	BRACKET
6	M S	3/8"	HANDLE.
7	M S	3/8"	STANDARD
8	WOOD	2"	WOODEN BEAM.

DRAWING BY L.HARACK.
TRAINING OFFICER - CARPENTRY
WORK SHOP WING - R.E.T.C
T. KALLUPATTI. 3-5-1965

சிவல் நிலத்திலும் நன்செய் நிலத்திலும் நன்றாக உபயோகிக்கலாம். கலப்பைக்கும் ஏர்காலுக்கும் உள்ள கோணத்தை மாற்றி சாலின் ஆழத்தை சரிசெய்து கொள்ளலாம். இதனுடைய விலை ரூ. 32. சர்க்கார் மானியம் ரூ. 8 கழித்து ரூ. 24-க்கு விற்பனை செய்யலாம்.

நாட்டுக் கலப்பையால் பல தடவைகள் உழுது புழுதி உண்டுபண்ணுவதைக் காட்டிலும், கல்லுப்பட்டி கலப்பையால் இரண்டு தடவைகள் உழுது நிலத்தைப் பக்குவப்படுத்தவும். ஒரு நாளில் இடை தரிசு இல்லாமல் 75 செண்டு நிலம் உழவு செய்யலாம்.

பர்கூர்

டாக்டர் மந்தரமூர்த்தி, கால்நடை பராமரிப்புத்துறை நெறியாளர், சென்னை.

பர்கூர் காளை

இவ்வினம் கோவை மாவட்டத்தில் பவானி வட்டத்திலுள்ள பர்கூர் மலைகளைச் சுற்றிலும் லம்பாடி என்பவர்களால் வளர்க்கப்படுகின்றது. இதன் காரணம்தொட்டே இதற்கு பர்கூர் என்ற பெயரும் வழங்குகிறது. பொதுவாக இம் மாடுகள் காடுகளிலேயே பிறந்து வளருகின்றன. பருமனில் சிறியதாகவும் நல்ல உடலமைப்பும் பார்ப்பதற்கு அழகாகவும் காணப்படுகின்றன. இவைகள் மூர்க்க குணம் உடையதாகவும், பழக்குவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. எனினும் ஓட்ட சக்தியிலும் உழைக்கும் சக்தியிலும் மிகச் சிறந்தவை.

இங்குள்ள மலைப் பிரதேசங்களில் கிராமங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பரவிக் கிடக்கின்றன. இங்கு வாழும் குடியானவர்களுக்கு முக்கிய தொழில் கால்நடைகளை வளர்த்தலேயாகும். இத்துடன் தங்கள் நிலங்களில் ராகி போன்ற தானியங்களைப் பயிரிடுகின்றனர். ஒவ்வொரு குடியானவரும் குறைந்தது 15 முதல் 200 வரை மாடுகள் வைத்திருப்பர். இம் மாடுகளின் சாணம் அவர்களது நிலங்களுக்குச் சிறந்த உரமாகப் பயன்படுகின்றது. தொட்டிகள் எனப்படுகின்ற வேலிகளுக்குள் தங்க வைக்கிறுர்கள். நல்ல மேய்ச்சல் கிடைப்பதால் வருடத்தில் பெரும்பகுதி நாட்கள் இம் மாடுகள் காடுகளிலேயே கழிக்கின்றன. அறுவடை சமயத்தில் இம் மாடுகள் கிராமங்களுக்குக் கொண்டு வரப்பட்டு அறுவடை வேலைகளுக் குப் பயன்படுத்தப்படுகின்றன. அறுவடை முடிந்து மறுபடி விதைக்கும் காலம் வரையிலும் அவைகள் கிராமங்களிலேயே தங்கியிருக்கின்றன. பிறகு மறுபடியும் காடுகளுக்குச் சென்றுவிடுகின்றன. பொதுவாக ஜனவரி மாதத்தில் சில நாட்களுக்கு இம் மாடுகளை உப்பு சத்துள்ள பகுதிகளில் மேய விடுகிறுர்கள். பசுக்களில் பால் கறப்பதில்லை. கன்றுகளுக்கே ஊட்டப்படுகின்றது. இன விருத்திக்காக பசுக்களை விற்பதில்லை. காளைகளை மட்டும் வருடத்திற்கு ஒருமுறை (அந்தியூர்) புதுப்பாளையத்திற்கு ஓட்டிச் சென்று அங்கு நடைபெறும் கால்நடை சந்தையில் விற்கிறுர்கள்.

அங்க அமைப்புக்கள்.—இம் மாடுகள் ஆங்காங்கே வெண்ணிறக் குறிகளுடன் சிவப்பு நிறம் உடையன. கொம்புகள், குளம்புகள், மூக்கு, கண்கள், வால் மயிர் முதலியன செந்நிறம்உடையதாக இருக்கும். தலை நீண்டும் கீழ் நோக்கிக் குனிந்தும் உள்ளது. நெற்றி எடுப்பானதாகவும் இரண்டு கொம்புகளின் மத்தியில் ஓர் பள்ளமும் அமைந்துள்ளது. எடுப்பான கண்களும், நீளமான நிமிர்ந்த காதுகளையும் உடையன. கொம்புகள் நல்ல நீளமும், அடிப்பாகத்தில் நெருங்கியும் உள்ளன. கொம்புகள் முதலில் பின்நோக்கி எழுந்து பின்பு வெளியேயும் மேல்நோக்கியும் வளைந்து கூரிய முனைகளை உடையதாகவும் அமைந்துள்ளன.

கழுத்து நீண்டும் சதைப்பிடிப்பும் உடையது. திமில் நன்கு வளர்ந்துள்ளது. அலைதாடி மெல்லியதாகவும், சிறியதாகவும் அமைந்துள்ளது. உடல் கட்டுக்கோப்பாகவும், நல்ல மார்புடனும் அமைந்துள்ளது. வால்

பர்கூர் பசு

நீளமாகவும் மெல்லியதாகவும் அடர்ந்த வால் மயிரையும் உடையது. கால்கள் குட்டையாகவும் உறுதியாகவும் அமைந்துள்ளன. பாதங்கள் சிறியதாகவும் காம்புகள் கொஞ்சம் நீளமுடையவைகளாகவும் அமைந்துள்ளன. தோல் மெல்லியதாகவும் குட்டையான உரோமங்களை உடையதாகவும் உள்ளது.

காளைகள்.—கட்டுக்கோப்பான உடலும் உறுதிவாய்ந்த நல்ல சதைப்பிடிப்புக்கொண்ட புட்டகங்களையும் உடையன. கால்கள் குட்டையாகவும் உறுதியாகவும் அமைந்துள்ளன. திமில் நன்கு வளர்ந்துள்ளது. வெகு சீக்கிரத்தில் பொலிக்கும் தன்மை கொண்டவைகள். பார்ப்பதற்கு சற்று மூர்க்கமாக தோன்றும். சாம்பல் நிறம் உடையன.

பசுக்கள்.—சுறுசுறுப்புடையவை. கொம்புகள் நல்ல நீளம் உடையன. மடி சிறியதாகவும் உடலோடு ஒட்டியும் உள்ளது. பல பசுக்களில் தொப்புள் மடிப்புக்கள் உள்ளன. சுமார் $1\frac{1}{2}$ வருடங்களுக்கொருமுறை ஈனுகின்றன. ஓராண்டுக்கொரு முறை ஈனும் பசுக்களும் உள்ளன. சத்துள்ள தீவனம் கொடுத்து நல்லமுறையில் பராமரித்தால் அதிக அளவு பால் கொடுக்கும் தன்மை உடையவை.

வெண்மை, வெண்மையும் சிவப்பும், வெண்குறிகளுடன் சிவப்பு, இருண்ட பழுப்பு ஆகிய நிறங்களை உடையன. வெண்மை நிறமுடைய பசுக்களில் தோல் இரத்த சிவப்பு நிறம் உடையதாக இருக்கிறது. நாளொன்றுக்கு சராசரி 2.7 கிலோ கிராம் அளவும், உயர்ந்தபட்ச சராசரி 4.4 கிலோ கிராம் அளவும் பால் கொடுக்கின்றன. ஒரு பசு 1,343.0 கிலோ கிராம் பால் 311 நாட்கள் அடங்கிய ஒரு ஈத்தில் கொடுத்திருக்கின்றது. பிறக்கும்பொழுது காளை கன்றுகளின் சராசரி எடை 16.9 கிலோ கிராமும் கிடாரிக் கன்றின் எடை 16.7 கிலோ கிராமும் ஆகும்.

கன்றுகள்.—சிறியதாகவும், நீளமான உடலையும் கால்களையும் பெற்றுள்ளன. பிறக்கும்பொழுது சராசரி 17 கிலோ கிராம் பருமன் உடையவை. நல்ல சுறுசுறுப்பு உடையவை.

எருதுகள்.—கட்டுக்கோப்பான உடலும் உறுதியான கால்களும் கொண்டவை. மிகுந்த உற்சாகமுடையவை. ஓட்டத்தில் மிக வல்லவை. பழக்குவதற்குக் கடினமாக இருந்தாலும் பழக்கிய பிறகு மிகுந்த சாதுவாக மாறிவிடுகின்றது. நஞ்சை நிலங்களிலும் புஞ்சை நிலங்களிலும் வேலை செய்வதற்கும் வண்டியிழுப்பதற்கும் பெரிதும் பயன்படுகின்றது.

தற்பொழுது இவ்வினம் பிற இனங்களுடன் இனச் சேர்க்கை ஏற்பட்டு கலப்பினமாக காட்சியளிக்கிறது. இங்கு வாழ் மக்களும் இதுபற்றி சிறிதும் கவலை கொள்வதில்லை. இதனால் இவ்வினம் கூடிய விரைவில் மறைந்துவிடுமோ என்ற நிலையில் சென்றுகொண்டிருக்கிறது. இவ் வினத்தில் எருதுகள் மிகக் குறைந்த செலவில் அதிக பலம் தரும் உழைப்பாளிகளாக விளங்குகின்றன. சாதாரண மக்களும் இவற்றினை வாங்கி பராமரித்துப் பலனடைய முடியும். நல்ல தீவனம் கொடுத்தால் பசுக்களும் போதிய அளவு பாலைக் கொடுக்கின்றன. எனவே இவ்வினம் அழியாமல் காத்தல் பொருட்டுத் தேர்ந்தெடுத்த இனச் சேர்க்கை நல்ல தீவனம், வீட்டுப் புழக்கத்திற்கேற்ற பராமரிப்பு இவைகளின் மூலம் இவற்றின் தனித்தன்மையை நிலைநிறுத்தும் பொருட்டும் நம் தமிழக அரசினர் பவானிசாகரிலுள்ள விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் இவ்வினத்தைப் பராமரிக்கும் திட்டத்தை ஏற்று 1955 முதல் நடத்தி வருகின்றனர். தற்சமயம் இங்கு சுமார் 79 மாடுகள் பராமரிக்கப்படுகின்றன.

இந்த இனத்தின் முக்கிய அம்சங்கள்.—நல்ல உழைப்புக்கு லாயக்கானவை. நீண்ட நேரம் பளு இழுப்பதிலும், உழவு செய்வதிலும் சளைக்காதவை. கால் குளம்புகள் உறுதியுள்ளன. மலைகளின்மீதே வளர்ந்துவருவதால் குளம்புகள் கெட்டியாகவும் தேய்வு பெறுமலும் உறுதியாயுள்ளன. லாடம் கட்டாமலே சாலைகளிலே வேலை செய்யலாம். நஞ்சை, புஞ்சை உழவுக்கும் சவாரி வண்டிகளுக்கும், பார வண்டிகளுக்கும் லாயக்குள்ளவை. நடுத்தர குடியானவர்களின் பண வசதிக்கேற்ற சிறந்த இனமாகும்.

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி

வெண்டை

மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி

கொத்தவரை

ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற

கத்திரி

புகழ் பெற்ற பெரிய ரோஜா, உருண்டை பல்லாரி

வெங்காயம்

இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், களை நாசினிகள்

கிடைக்குமிடம் :—

ராஜா பண்ணைத் தோட்டம்

2, வைத்தியராமய்யர் தெரு, தி. நகர்,
[இந்தி பிரசார சபா அருகில்], சென்னை-17.

தந்தி : RAJSEED போன் : 42262

பசிப்பிணியிலிருந்து நிவாரணம்

நில வளமே உங்கள் செல்வம்

நில வளமோ, மண்ணிலிருந்து கிடைக்கக்கூடிய தாவர உணவுப் பொருட்களான

நைட்ரஜன்

பாஸ்பாரிக் அமிலம், மற்றும்

பொட்டாஷ்

ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது. பயிர்களால் உறிஞ்சி எடுத்துக் கொள்ளப்படும் இம் மூன்று போஷாக்குச் சத்துக்களையும் திரும்பவும் அளிப்பதின் மூலம், மண் வளமும், அதன் மூலம் உங்கள் நல் வாழ்வும் பாதுகாக்கப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக உணவுப் பிரச்னையிலிருந்து விமோசனம் கிடைக்கிறது

இலவச ஆலோசனைகள், பிரசுரங்கள் மற்றும் பயிர்களுக்கு உரமிடுதலைப் பற்றிய குறிப்புகள் ஆகியவை கிடைக்குமிடம் :

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்சி லிமிடெட்
8/9, தம்புசெட்டி தெரு, சென்னை - 1

IP.G.25TA



வானொலிச் செய்திகள்

அன்புடையீர்

நீங்கள் இதற்கு முன்னர் எழுதிய கடிதங்களை வாசித்திருப்பீர்களெனக் கருதுகிறேன். இம்மாதம் வரை வானொலி விவசாய அலுவலராகப் பணிபுரிந்து வந்த திரு ஜான்நைட் அவர்கள் இம்மாகான விவசாயச் செய்தி அலுவலராக இப்பொழுது வேலை செய்து வருகிறார்கள். நான் ஆகஸ்டு 3-ம் தேதியிலிருந்து இவ்வேலையை மேற்கொண்டேன் இவ்விதம் விவசாயிகளாகிய உங்களுக்கு இம்மாதத்திலிருந்து எல்லாமே ஒரு புது மாற்றம். இப்பதவி வகிப்பவரில் மாற்றம்; அம்மாதிரியே இப்பொழுது விவசாயிகளுக்கான ஒலிப்பரப்பும் காலத்திலும் ஒரு புது மாற்றம். ஆனால் நமது வாழ்க்கையில் இம்மாதிரி மாற்றங்கள் அவசியமென நினைக்கிறேன். ஆகவே, இம் மாற்றங்களை பெரிதும் விரும்புவீர்களெனவும் கருதுகிறேன். இதுவரை விவசாயிகளுக்கான நிகழ்ச்சிகளை திருச்சி அகில இந்திய வானொலி நிலையம் மாலை 6–20 முதல் 7–15 வரை ஒலிபரப்பு செய்து வந்தது. ஆனால், இந்த நேரத்தில் விவசாயிகள் ரேடியோ கேட்க முடியவில்லையெனக் கூறப்பட்டு வந்தது. அதன் விளைவாக அகில இந்திய வானொலி நிர்வாகத்தினர் விவசாயிகள் கேட்கக் கூடிய நேரத்திற்கு மாற்றியுள்ளனர். இப்பொழுது நமது திருச்சி வானொலி நிலையம் தினமும் மாலை 7-30 முதல் 8 வரை விவசாய சம்பந்தமான நிகழ்ச்சிகளை ஆகஸ்டு 15-ம் தேதியிலிருந்து ஒலிபரபபுகின்றனர். வாரம் ஒவ்வொரு செவ்வாயும் வெள்ளியும் சிறப்பு வாய்ந்தவை. ஏனெனில் இவ்விரண்டு நாட்களிலும்தான் நம் வானொலி மன்றங்கள் கூடி ரேடியோ கேட்டு வி வாதித்து செயல்பட்டு முடிவு செய்கின்றன. இந்நாட்களில் விவசாயிகளுக்காக விவசாய நிபுணர்களும் மற்றவர்களும் விவசாயிக் கருத்துகளை எடுத்துக் கூறுகின்றனர். ஆகவேதான் அந் நாட்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாகும். ஆகவே விவசாயிகளாகிய நீங்கள் தினந்தோறும் திருச்சியிலிருந்து ஒலிபரப்பப்படும் விவசாய நிகழ்ச்சிகளை மாலை 7–30 முதல் 8 மணி வரை கேட்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் உங்கள் பஞ்சாயத்தில் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் கூடும் கிராம வானொலி மன்றக் கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறும் வேண்டிக் கொள்கிறேன். 1965-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ம் தேதியன்று மரம் நடுதல் கம்போஸ்ட் தயாரித்தல் முதலியவைப்பற்றி புட்லூர் பஞ்சாயத்து தலைவர் திரு. பி. வி. ராமசாமி முதலியாருடன், திருவள்ளூர் மாவட்ட விவசாய அதிகாரி பேட்டி கண்ட விவரத்தையும் நீங்கள் கேட்டுப் பயனடைந்திருப்பீர்களென்று எண்ணுகிறேன். இவ்விதமான விவசாயிகளைப் போட்டிகாணும் நிகழ்ச்சிகளை வியாழக்கிழமை தோறும் கேட்டுப் பயனடையுங்கள். மேலும் எந்தெந்த முறையில் அபிவிருத்தி செய்ய முடியும் என்பதற்கும் எம்மாதிரியான விஷயங்களை நீங்கள் கேட்க விரும்புகிறீர்களெனவும் எனக்கு எழுதுமாறும் விரும்புகிறேன்.

உங்கள் நலனைக் கருதும்

டி. கணபதி,

வானொலி விவசாய அலுவலர்,

36/பி, மவுண்ட் ரோடு, சென்னை–2.

சென்ற மாதத்தில் நீங்கள் கேட்ட நிகழ்ச்சிகளில் நினைவில் கொள்ள வேண்டியவை!

காய்கறிகளைத் தாக்கும் பூச்சிகளைத் தடுப்பீர்!

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் காய்கறி வகைகள் பலவிதமான பூச்சிகளின் தாக்குதலுக்கு ஆளாகின்றன. அதனால் செடிகளின் வளர்ச்சி குன்றி காய்ப்புத் தன்மை மிகவும் பாதிக்கப்படுகிறது.

கத்தரி

நாற்றங்கால், புள்ளிவண்டு, மில்லோசேரஸ் வண்டு, தத்துப்பூச்சி, வெட்டுக்கிளி முதலியவற்றால் பாதிக்கப் படாமலிருக்க 100 கிராம் கரையும் டி.டி.டீ. 50 சத மருந்தை 50 லிட்டர் தண்ணீரில் கரைத்து நாற்று முளைத்த 2 வாரத்தில் தெளிக்க வேண்டும். இலைகளில் உள்ள பச்சை சத்தை சுரண்டி சேதப்படுத்தும் புள்ளிகள் கொண்ட ‘எபிலாக்னு’ வண்டை தடுக்க டி.டி.டீ. 0·1 சதவீதம் அல்லது என்டிரின் 0·02 சதவீதம் (100 மிலி லிட்டர் 20 சதவீதம் என்டிரினை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) நாற்று நட்ட 7 வாரங்களுக்குப் பின் துவங்கி இரு வாரங்களுக் கொரு முறை 3 முறைகள் தெளிக்க வேண்டும். தண்டு, காய்துளைக்கும் புழு இளங்குருத்துக்களைத் துளைத்தும், காய்களைத் துளைத்தும் நாசம் செய்கின்றன. இதைத் தடுக்க 0·1 சத லின்டேன் அல்லது 0·02 சத என்டிரின் அல்லது 0·1 சத டி.டி.டீ. அல்லது 0·1 சத செவின் மருந்தை நட்டு 1 மாதத்துக்குப் பின் 14 நாட்களுக் கொருமுறை 4 தடவை தெளிக்கவேண்டும். தத்துப்பூச்சியைத் தடுக்க 0·1 சத டி.டி.டீ. அல்லது 0·1 சதம் செவின் அல்லது 0·02 சதம் என்டிரின் தெளிக்க வேண்டும். அசுவினியைத் தடுக்க லின்டேன் 0.1 சதம் அல்லது 0·1 சதம் செவின் தெளிக்கலாம். மாவுப்பூச்சியைத் தடுக்க 0·025 சத பாரதியான் அல்லது 0·1 சத மாலதியான் தெளிக்கவேண்டும். சிவப்புப் பேனைத்தடுக்க எக்கருக்கு 10 கிலோ கந்தகத்தூளைத் தூவலாம் அல்லது கந்தகக் கரைசலை தெளிக்கலாம். டி.டி.டீ. 0·1 சதம் அல்லது என்டிரின் 0·02 சதம் தெளித்து கண்ணாடி இறக்கைப்பூச்சி, இலை சுருட்டும் பூச்சி, பூ மொட்டுப்புழு ஆகியவற்றின் சேதத்தைக் கட்டுப்படுத்தலாம்.

தக்காளிப் பயிருக்கும், காய்களுக்கும் சேதத்தை உண்டாக்கும் கடலைப்புழுவைத் தடுக்க டி.டி,டீ. 0·1 சதம்

அல்லது 0·02 சதம் என்டிரின் மருந்தை 3 வாரங்களுக்குப் பின் 14 நாட்களுக் கொருமுறை 3 முறைகள் தெளிக்கவேண்டும்.

வெண்டை

தத்துப்பூச்சியின் சேதத்தைத் தடுக்க என்டிரின் 0·02 சதம் அல்லது டி.டி.டீ. 0·1 சதம் மருந்தை செடிகள் முளைத்த 2 வாரங்களுக்குப் பின் 10 நாட்களுக் கொரு முறை 3 முறைகள் தெளித்தல் வேண்டும். குருத்து, காய் துளைக்கும் புழுவைக் கட்டுப்படுத்த செடி முளைத்து 2 வாரமான பின் 0·02 சதம் என்டிரின் 10 நாட்களுக் கொருமுறையாக 3 தடவைகள் தெளிக்கவேண்டும். சிவப்பு பேனை கட்டுப்படுத்த கந்தகத்தூள் தூவலாம்.

பூசனி, பரங்கி, பாகல், புடல், பீர்க்கன் முதலியவற்றில் சேதம் ஏற்படுத்தும் பழஈயைத் தடுக்க 0·02 சதம் என்டிரின் 0·025 சதம் பாரத்தியான், 0·1 சதம் செவின் மருந்தை செடிகள் முளைத்த 1½ மாதத்துக்குப் பின் 10 நாட்களுக் கொருமுறை 4 தடவைகள் தெளிக்கவேண்டும். புல் பச்சைக் காவடிப் புழு, சிவப்பு-கருப்பு வண்டுகள், கொடி உறிஞ்சும் பூச்சி முதலியவற்றைக் கட்டுப்படுத்த 0·02 சதம் என்டிரின் அல்லது 0·025 சதம் பாரத்தியான் மருந்தைத் தெளிக்கவேண்டும்.

அவரை, பீன்சு முதலியவற்றைத் தாக்கும் அசுவிணியைக் கட்டுப்படுத்த 0·1 சதம் மாலதியான் தெளிக்கவேண்டும். காய் குடையும் புழுவைத் தடுக்க டி.டி.டீ. 0·1 சதம் அல்லது 0·02 சதம் என்ட்ரின் தெளிக்கவேண்டும் நாற்றப் பூச்சியைத் தடுக்க டி.டி.டீ. 0·1 சத மருந்தை தெளிக்கவேண்டும். கம்பளிப்பூச்சியைத் தடுக்க ஃபிஷ் ஆயில் ரோஸின் சோப் 1 கிலோவை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும்.

முள்ளங்கி, முட்டைக்கோஸ் பயிர்களில் தோன்றும் இலைப்புழு அல்லது டைமன் பூச்சியைத் தடுக்க டி.டி.டீ. 5 சத தூளைத் தூவலாம். அசுவிணியை மாலத்தியான் அல்லது என்டிரின் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

உருளைக்கிழங்கு செடிகளுக்கு சேதம் அளிக்கும் சுருளும் வெட்டுப்புழு, கிழங்குப்புழு முதலியவற்றைத் தடுக்க டி.டி.டீ. 5 சத தூள் அல்லது டி.டி.டீ. 0·1 சத கலவை உபயோகிக்கலாம். சர்க்கரை வள்ளிக்கிழங்கில் ஏற்படும் எறும்பு வண்டின் சேதம் தவிர்க்க டயல்டிரின் 0·1 சத மருந்தை கிழங்கு உற்பத்தியாகும் பருவத்தில் 3 வாரங்களுக்கொருமுறை 3 தடவை தெளிக்கவேண்டும். வெங்காயத்துக்கு சேதமேற்படுத்தும் பேன், வெட்டுப்புழு முதலியவற்றைத் தடுக்க பி.எச்.சி. 0·05 சதம் தெளிக்கவேண்டும். முருங்கை மரத்தில் சேதமேற்படுத்தும் வெள்ளை கம்பளிப்பூச்சியைக் கட்டுப்படுத்த ஃபிஷ் ஆயில் ரோஸின் சோப் தெளிக்கவேண்டும்.

[6–8–65 அன்று திரு. பி. எம். சீனிவாசன், பிரதம பயிர்ப் பாதுகாப்பு நிபுணர் (பூச்சியல்), கோவை அவர்கள் ஆற்றிய வானொலி உரைச் சுருக்கம்.]

வாழை தீவிர சாகுபடி

மண்.—வாழை நன்கு செழித்து வளர, வளமாகவும் இறுகாமல் பொல பொலவென்று இருக்கும் மண் சாலச் சிறந்தது. மண் நல்ல வடிகால் வசதியும் காற்றோட்டம் உள்ளதாயும் இருக்கவேண்டும்.

காலம்.—தக்க பாசன வசதி உள்ள இடங்களில் தை—மாசிப் பட்டங்களில் நடுகிறார்கள். ஆடிப்பட்டத்திலும் சில இடங்களில் நடுகிறார்கள். பச்சை வாழை பயிராகிவரும் கே. வி. குப்பம், குடியாத்தம் வட்டாரங்களில் (வட ஆற்காடு மாவட்டம்) புரட்டாசி, ஐப்பசி மாதங்கள் தவிர மற்ற எல்லாப் பருவங்களிலும் வாழை நடப்படுகிறது. மலைப் பிரதேசங்களில் 'விருப்பாச்சி' சித்திரையில் நடப்படுகிறது.

உரமிடுதல்.—வாழை மிகுதியாகவும், விரைவாகவும் சத்தை உறிஞ்சும் பயிர் ஆகும். பொதுவாக வாழை ஒன்றுக்கு 50–75 ராத்தல் தொழு உரம், 20 அவுன்ஸ் அமோனியம் சல்பேட், 20 அவுன்ஸ் சூப்பர் பாஸ்பேட், 24 அவுன்ஸ் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் தேவைப்படுகின்றன. இந்த உரங்களை கன்று நட்ட 3 அல்லது 4 மாதங்களில் முதல் தடவையும், 5 அல்லது 6 மாதத்தில் இரண்டாவது தடவையும் இரு பகுதிகளாகப் பிரித்து உரமிட வேண்டும். அமோனியம் சல்பேட்டை 4 அல்லது 5 தடவைகளில் சமமாகப் பகிர்ந்து 4 அல்லது 6 வாரங்களுக் கொருமுறை இடுவதால் நல்ல பலன் கிடைக்கும். திருச்சி மாவட்ட நஞ்சைப் பகுதிகளில் பிண்ணாக்கு உரம் இடப்படுகிறது. உரங்களை அடிமரத்தின் அருகில் இடாமல், செடியின் வளர்ச்சிக் கேற்ப 2½′ முதல் 4′ தூரத்தில் 6″ மண் பறித்து அதில் தொழு உரம் பரப்பி அதன் மேல் ரசாயன உரங்களைத் தூவி, மண் அணைத்து நீர் கட்ட வேண்டும்.

நோய்கள்.—வாழை மரத்தினுள் ஆகாரம் செல்லும் பாதைகளில் 'வைரஸ்' அடைத்து இலைகளின் ஓரம் வளைந்து இளமஞ்சள் நிறமாகி, எளிதில் உடையும் தன்மையை ஏற்படுத்தி, வளர்ச்சியைத் தடுத்து, இலைகள் ஒருங்கே தொண்டையில் அடைத்து நிற்பது 'முடிக்கொத்து' நோய் ஆகும். இதைத் தடுக்க நோயுற்ற செடிகளை அப்புறப்படுத்தவேண்டும். இந்நோயை உண்டாக்கும் வைரஸை ஏந்திச் செல்லும் ஒருவகை அசுவிணிப் பூச்சிகளை மண்ணெண்ணெ தெளித்து அழிக்கவேண்டும். 'வாழைவாடல் நோய்' மண்ணில் உள்ள பூஞ்சாணத்தால் உண்டாகிறது. இதனால் இலைகள் வாடி காம்பில் ஒடிந்து தொங்கும். நடுக்குருத்து மட்டும் விரியாமல் மேல் நோக்கி வளைந்து நிற்கும். இந்நோயைத் தடுக்க நோய் வந்த வாழைகளை அப்புறப்படுத்த வேண்டும்; நடுவதற்கு முன் கன்றுகளைக் கரிம பாதரச பூஞ்சாண நாசினி கலவையில் நனைத்து நடவேண்டும். நோய் தோன்றியவுடன் 10 நாட்களுக்கொருமுறை பூஞ்சாண நாசினி கலவையை மண்ணில் தெளிக்கவேண்டும். இலைப்புள்ளி நோயால், பாதிக்கப்பட்ட வாழையின் இலைகள் காய்ந்து விடுகின்றன. இதைத் தடுக்க 1 சத போர்டோ கலவையை 3 முறை 1 மாத இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

கிழங்கு துளைக்கும் வண்டுகளால் கன்றுகள் வளராமல் பட்டுப்போகும். பூச்சி நாசினிகளின் கலவையை வாழை யைச் சுற்றி மண்ணில் தெளிப்பதால் இதைக் கட்டுப்படுத் தலாம்.

வாழையை வெளிநாட்டுக்கு அனுப்பி அந்நிய செலா வணியை ஈட்ட, நாம் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். பச்சை வாழை பயிரிடப்படும் வடஆற்காடு மாவட்டம், பூவன் வாழை பயிராகும் திருச்சி மாவட்டம் ஆகிய இடங்களில் வாழை தீவிர சாகுபடித் திட்டம் அமுலி லுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஏக்கருக்கு ரூ. 500 குறுகிய காலக் கடனாகக் கொடுக்கப்படுகிறது. இதில் பாதி பண மாகவும், மீதி எரு, கன்றுகள், பயிர்ப்பாதுகாப்பு மருந்து போன்ற பொருள்களாகக் கொடுக்கப்படுகிறது. வாழைப் பழ அபிவிருத்திக் கார்ப்பரேஷன் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் முயற்சியில் ஈடுபடும். எனவே திருந்திய முறைகளைக் கையாண்டு வாழை உற்பத்தியைப் பெருக்குங்கள்.

[13–8–65 அன்று திரு சி. எம். பக்தவத்சலம், (வாழை ஆய்வு அலுவலர், ஆடுதுறை) அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்.]

கரும்புப் பயிரை பூச்சி தாக்குதலினின்று பாதுகாப்பீர்!

சென்னை மாநிலத்தில் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டு வருகிறது. இப்பயிரை பலவகைப் பட்ட பூச்சிகள் தாக்கி சேதம் விளைவித்து உற்பத்தியையும், தரத்தையும் பாதிக்கின்றன. இந்த சேதத்தை தவிர்க்க வேண்டியது அவசியம்.

இளங் குருத்துப் புழு.—மஞ்சள் நிறமுள்ள தாய் அந்துப் பூச்சி இலைகளின்மேல் இடும் முட்டைகளிலிருந்து வெளிப்படும் புழுக்கள் இளந்தண்டைத் துளைத்துச் சேதம் ஏற்படுத்துவதால், குருத்துக்கள் காய்ந்து விடுகின்றன. இதன் சேதம் கோடையில் அதிகமாகக் காணப்படுகிறது. கரும்பு சோகையைக் கட்டைகளில் பரப்பி இதன் சேதத் தைக் குறைக்கலாம். 0·1 சத என்டிரின் (100 மில்லி லிட்டர் மருந்தை 20 லிட்டர் தண்ணீரில் கலந்து) பயிர் நட்ட 20 நாட்களிலிருந்து 3 வாரங்களுக்கொருமுறையாக 3 மாதங்கள் வரை தெளிக்கலாம். காமா பி.எச்.சி. 20 சத நீர்க்கலவை $\frac{1}{2}$ லிட்டரை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து கரணைகளின் மேல் நடுவதற்கு முன் தெளிக்கலாம்.

நுனிக் குருத்துப் புழு.—கரும்பு பயிரிட்ட 3 மாதங் களிலிருந்து இப்புழுவின் சேதம் தொடங்கி அறுவடை வரையிலும் காணப்படுகிறது. முட்டையிலிருந்து வெளி வரும் புழுக்கள் இலைகளைத் துளைத்து, குருத்தின் உள்ளே சென்று குருத்தை மேலும் வளர விடாமல் தடுக்கின்றது. இப்புழு வளரும் பாகத்தைப் பாதிப்பதால், கணுக்களில் உள்ள மொட்டுகள் பயிர் விடுகின்றன. இதன் சேதத் தைத் தடுக்க முட்டைகளைச் சேகரித்து அழிக்கவேண்டும். இப்புழு தாக்காத கோ. 299, கோ. 313, கோ. 331 போன்ற வகைகளைப் பயிர் செய்யலாம். "ஐஸோடிமா" என்ற ஒட்டுண்ணிகளைப் பரவ விடுவதின் மூலம் இதன் சேதத்தைச் சற்று குறைக்கலாம்.

தண்டுப் புழு.—கரும்புப் பயிரில் கணுக்கள் பிடிக்கும் காலத்திலிருந்து இப்புழுவின் சேதம் தொடங்கி அறு வடை வரை நீடிக்கிறது. முட்டைகளிலிருந்து வெளி வரும் புழுக்கள் தண்டுகளைத் துளைத்து உட்சத்தைத் தின் கின்றது. இதைத் தடுக்க பாதிக்கப்பட்ட தண்டுகளை அப் புறப்படுத்த வேண்டும். புழுதாக்கப்படாத நல்ல கரணை களை நடவுக்கு உபயோகப்படுத்த வேண்டும். இப்புழு தாக்காத கோ. 299, கோ. 313, கோ. 331 ஆகிய வகைகளைப் பயிர் செய்யலாம்.

கரும்பு பைரில்லா.—வெண்மையான சிறிய வாலுடன் கூடிய பூச்சிகள் இலையிலுள்ள சாற்றை உறிஞ்சிக் குடிப்ப தால், இலைகள் பழுப்பு கட்டி, காய்ந்து விடுகின்றன. இதன் சேதம் ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களில் அதிகம். இதைத் தடுக்க முட்டைகளையும் பூச்சிகளையும் சேகரித்து அழிக்கவேண்டும். பி.எச்.சி. 10 சததூள் அல்லது 0·05 சத நீர்க்கலவையை உபயோகிக்கலாம்.

வெள்ளைப் பூச்சி.—அதிக ஈரப்பசையும், குறைந்த உஷ்ணமும் உள்ள இடங்களில் இதன் சேதம் அதிகம். இதைத் தடுக்க பாரத்தியான் 0·025 சதம் (50 மில்லி லிட்டர் மருந்தை 50 லிட்டர் நீரில் கரைத்து) தெளிக்க வேண்டும்.

மாவுப் பூச்சி.—சிவந்த வெண்ணிற மாவுப்பூச்சிகள் முற்றின கரும்பைச் சேதப்படுத்தி, சத்தைப் பாதிக்கிறது. இதைத் தடுக்க பாரத்தியான் 0·05 சதம் (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவேண்டும்.

கறையான்.—நிலத்தில் புதைந்துள்ள கரும்புக் கரணை களின் சத்தான பாகங்களையும் குருத்துவிடும் முளைகளையும் கறையான் அரித்து தின்றுவிடுகிறது. இதைத் தடுக்க நடுவதற்கு முன் 3 சத "ஹெப்டாகுளோர்" என்ற மருந்தை ஹெக்டருக்கு 36 கிலோ வீதம் மண்ணில் கலக்க வேண்டும்.

மற்றும் அசுவினி, இலையுண்ணி, தத்துப்பூச்சி, இலைப்புழு வெட்டுக்கிளி போன்றவற்றின் சேதத்தைத் தவிர்க்க பாரத்தியான் 0·025 சதம் அல்லது 0·05 சதம் மருந்தைத் தெளிக்கலாம். தகுந்த காலத்தில் தடுப்பு முறைகளைக் கையாண்டு, பூச்சிகளின்சேதத்தைத் தவிர்த்து, கரும்பின் மகசூலை உயர்த்துங்கள்.

(20–8–65 அன்று திரு. டி. சந்தான ராமன், பூச்சியல் விரிவுரையாளர், கோவை அவர்கள் ஆற்றிய வானொலி உயிரைன் சுருக்கம்.)

பழமரங்கள் நடுவீர்!

பழங்களில் 'சி' போன்ற வைட்டமின் சத்துக்கள் நிறைந்துள்ளன. சராசரி தேவைக்கு நான்கில் ஒரு பங்குக்கும் குறைவாகவே நம் நாட்டில் பழங்கள் உப

யோகிக்கின்றனர். நம்முடைய மா, வாழை போன்ற பழங்களுக்கு வெளி நாடுகளில் நிறைய மதிப்பு ஏற்பட்டுள்ளது. தமிழகம் பழ மரங்களுக்கு ஏற்ற வெப்ப நிலையுடைய பகுதியாகும். எனவே பழ உற்பத்தியைப் பெருக்க திட்டங்கள் வகுக்கப்பட்டன. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம், அதிகபட்சம் ஒரு விவசாயிக்கு ரூ. 2,000 வரை நீண்ட காலக் கடன் வழங்கப்படுகிறது. இதை $5\frac{1}{2}$ சத வட்டியுடன் 10 வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடன் சாகுபடி செய்யப்படும் நிலத்தின் மீது வழங்கப்படுகிறது. திராட்சைத் தோட்டங்கள் ஏற்படுத்த ஏக்கருக்கு ரூ. 600 வீதம் கடன் அளிக்கப்படுகிறது.

தேவையான பழச் செடிகளை அரசாங்கப் பழப்பண்ணைகளிலிருந்தும், நாற்றங்கால்களிலிருந்தும் மற்றும் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட 31 தனியார் நாற்றங்கால்களிலிருந்தும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேவையான செடிகளைக் கடன் தொகை மூலமாகவே வழங்கப்படுகிறது. தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க வட்டாரத்தில் உள்ள விவசாய விரிவினை அலுவலர்களுடன் கூடுதலாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பழ அபிவிருத்தி உதவியாளர் ஒருவரும், மேஸ்திரியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறுகிய காலக் கடனுக ஏற்கனவே உள்ள பழத் தோட்டங்களில் உரமிடுதல், பயிர்ப்பாதுகாப்பு செய்தல் போன்ற அபிவிருத்தி வேலைகளுக்காக ஏக்கருக்கு ரூ. 65 வீதம் உரமாகவும், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகளாகவும் கொடுக்கப்படுகிறது. நபர் ஜாமீன் மேல் கொடுக்கப்படும் இக்கடனை $5\frac{1}{2}$ சத வட்டியுடன் வருட முடிவில் ஒரே தவணையில் வசூலிக்கப்படுகிறது. இந்தக் கடன்கள் பெற விண்ணப்ப நமூனுக்களையும் வேண்டிய பிற விவரங்களையும் விவசாய விஸ்தரிப்பு அலுவலரிடமிருந்து பெறலாம். இத்தகைய கடன்கள் பஞ்சாயத்துக்களுக்கும் வழங்கப்படுகிறது.

3' × 3' × 3' அளவு கொண்ட குழிகளை கோடை காலத்தில் தோண்டி காய விட வேண்டும். குழிகளுக்கு இடையேயுள்ள தூரம் நடும் பழவகைகளுக்கேற்ப மாறுபடும். மாவுக்கு 40 அடியும், எலுமிச்சை வகைகளுக்கு 25 அடியும், வாழைக்கு 6 அடியும் இடைவெளி கொடுக்க வேண்டும். குழிகள் தோண்டிய 2 மாதங்கள் கழித்து 2 கூடை மக்கிய எரு போட்டு குழியை மூட வேண்டும். பழச் செடிகளை ஆனியிலிருந்து கார்த்திகை முடிய நடலாம். ஒட்டுச் செடிகளில் ஒட்டு கட்டப்பட்ட பாகம் பூமிக்கு மேல் இருக்கும்படி நட வேண்டும். ஒட்டு மாஞ்செடிகளை 2 அல்லது 3 அடி உயரத்துடன், 4 அல்லது 5 கிளைகள் உள்ளதாகப் பார்த்து நட வேண்டும். நட்ட பின், ஒட்டு கட்டிய பாகத்திற்கு அடியிலிருந்து கிளம்பும் துளிர்களை எப்போதும் அகற்றி விட வேண்டும். வகைக்கேற்றவாறு 2 முதல் 4 வருடங்களில் செடிகள் பலன் தரும். அதற்கு முன்பாக விடும் பூக்களைக் கிள்ளி எறிந்து விட வேண்டும்.

வேண்டிய ஆலோசனைகள் பெற்று பயிர்ப்பாதுகாப்பு முறைகளைக் காலத்தில் செய்ய வேண்டும். வசதியுள்ளவர்கள் வீட்டுத் தோட்டத்திலேயே வாழை, பப்பாளி, எலுமிச்சை, திராட்சை போன்றவற்றைச் சாகுபடி செய்து, பழ உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

(1965-ம் ஆண்டு ஆகஸ்ட மாதம் 27-ந் தேதி அன்று திரு. டி. எம். வெங்கட்ராம்; உதவி பழக்கலை நிபுணர், விருத்தாசலம் அவர்கள் ஆற்றிய வானொலி உரைச் சுருக்கம்.)

நீங்கள் கேட்கப் போகும் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.

(செவ்வாய், வெள்ளிக்கிழமை தோறும் இரவு 7–30 லிருந்து 8 மணி வரை திருச்சி, சென்னை ஏ, திருநெல்வேலி நிலையங்களில் கேட்கலாம்.)

தலைப்புகள். (1)	பேசுபவர். (2)
வெள்ளி 1—10—65	
கேழ்வரகு சாகுபடியும் அதன் தீவிர சாகுபடி குறிப்புகளும்.	திரு. கே. மகாதேவன், பி.எஸ்ஸி (விவசாயம்), உதவி சிறுதானிய நிபுணர், கோவை.
வெள்ளி 8—10—65	
சோளத்தைத் தாக்கும் பூச்சிகளும் அதைத் தடுக்கும் முறைகளும்.	திருமதி லீலா டேவிட் பி.எஸ்ஸி (விவசாயம்), பூச்சியியல் விரிவுரையாளர், கோவை.
செவ்வாய் 12—10—65	
பிரத்தியேக பட்டங்களில் கரும்பு சாகுபடி.	திரு பி. பரமாநந்தன் பி.எஸ்ஸி (விவசாயம்), கரும்பு பெருக்க அலுவலர், திருச்சி.
வெள்ளி 15—10—65	
சென்னை மாகாணத்தில் தீவிர சாகுபடித் திட்டத்தின் முன்னேற்றமும், தீவிர விவசாய பகுதித் திட்டத்தின் அமுலும்.	திரு டி. எஸ். பிரான்ஸிஸ், பி.எஸ்ஸி (விவசாயம்), எம். எஸ். (கார்னல்) கூட்டு விவசாய, நெறியாளர், தீவிர விவசாய பகுதித் திட்டம் சென்னை.
வெள்ளி 22—10—65	
சம்பா தாளடிப் பயிரில் பயிர் பாதுகாப்பு முறைகள்.	திரு கே. ஆர். நாகராஜன், பயிர்ப்பாதுகாப்பு நிபுணர், தஞ்சாவூர்.
வெள்ளி 29—10—65	
விவசாயிகளுக்கான சலுகைகளும், கடன் வசதிகளும்.	திரு எம். எஸ். சேதுராமன், பி.எஸ்ஸி (விவசாயம்), விவசாய நெறியாளரின் அரசிதழ் பதிவுபெற்ற உதவியாளர்; சென்னை.

தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்பின் விலாங்குப் புழுக்களும் (NEMATODES) அவற்றைத் தடுக்கும் முறைகளும்.

எஸ். வேணுகோபால், எம். எஸ்ஸி., நடராஜன், எம். எஸ்ஸி.,
எச். சுப்ரமணியன், பி. எஸ்ஸி. (வேளாண்மை), மத்திய கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை, கடலூர்.

தற்காலத்தில் சென்னை மாநிலத்தின் கரும்பு பயிரிடப்படும் பல பகுதிகளிலும் கரும்பு சாகுபடி அதிகரித்திருப்பதற்கு, சர்க்கரை ஆலைத்தொழில் வளர்ச்சியும், விஞ்ஞான வளர்ச்சியும், கணிசமான லாபமும், வேளாண் துறையினரின் முயற்சிகளும் முக்கிய காரணங்கள் என்பது யாவரும் அறிந்ததே. தென்னாற்காடு வட்டம் மணற்பாங்கான வளமான சமவெளிப் பகுதியாகும். இது சுமாராக 40 அல்லது 50 அங்குல சராசரி வருட மழையுடன் கரும்புப் பயிருக்குப் பொருத்தமான வெப்ப தட்பமும் இயற்கையாயமைந்த பகுதியாகும். ஆனால் இம் மண்ணின் அமைப்பு கரும்பின் எதிரிகளில் ஒன்றான விலாங்குப் புழுக்களின் (Parasitic Nematodes) வாழ்விற்கு ஏற்றதாகவும் இருக்கின்றது. இவை பூசணங்களைப்போலவும், பூச்சிகளைப் போலவும் கரும்பைத் தாக்கும் முக்கிய எதிரிகள். இப் பகுதியில் கரும்பு மகசூல் குறைவுக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றது.

கரும்பின் வைரிகளான விலாங்குப் புழுக்கள் (Parasitic Nematodes) மிகவும் நுண்ணியவை. இவை ஒரு மில்லி மீட்டர் முதல் ஐந்து மில்லி மீட்டர் வரை நீளமுள்ள மெல்லிய தையல் நூல்போல் இருக்கின்றன. ஒரு கையளவு மண்ணில் பல நூறு புழுக்கள் இருக்கலாம். இப் புழுக்களால் பாதிக்கப்பட்ட நிலத்தின், சலித்து எடுத்த ஒரு பிடி மண்ணை ஒரு மெல்லிய மஸ்லின் அல்லது வாயில் (Voile cloth) துணியில் இட்டு சிறு முடிச்சு ஆக்கி நீர் நிரம்பிய ஒரு கண்ணாடி டம்ளரில், முடிச்சு நீர் மட்டத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும்படி கட்டித் தொங்கவிட்டால், 24 மணி நேரத்தில், இப்புழுக்கள் துணியின் வழியாக முண்டிச் சென்று பாத்திரத்தின் அடியில் சேரும். சிறு உருப் பெருக்கியாலும் (Lens) அதைக் காணலாம். இப் புழுக்கள் பலவகைப்படும்.

இப்புழுக்கள் கரும்பின் இளவேர்களையும், வேர்முனைகளையும் (Root hairs) தாக்கி அதன் சத்துக்களை உறிஞ்சி விடுகின்றன. இவை முக்கியமாக கோ. 658, கோ. 775, கோ. 1139, கோ. 1188 போன்ற கோவை வகைக் கரும்புகளையும், பி. ஓ. ஜெ. 2878 போன்ற பஞ்சாப் வகைக் கரும்பையும் வெகுவாகத் தாக்குகின்றன.

இப்புழுக்களால் தாக்கப்பட்ட கரும்பின் சோகைகள் வெளிறிப் போதலும் (Yellowing of Foliage) வாடிப் போதலும் (Wilting of Foliage), கரும்பு வாடலும் (Wilting of Cane), கரும்பு வளர்ச்சி குன்றி முரணையாவதும், (Stunted Growth), கரும்பு மெலிந்து எடை குறைவதும் (Thin Canes), வேர் முடிச்சுகள் (Root galls), சக்தியற்ற தடித்த வேர்கள் (Stubby Roots) தோன்றுவதும், வேர்ச் சிதைவும் (Necrosis of roots and reddening) ஏற்படுதலும் சாதாரணமாயுள்ள அறிகுறிகள் ஆகும். இப்புழுக்கள் இவ்வாறு சேதமிழைக்கின்றன.

கரும்பு அறுவடைக்குப் பின்பு, நிலத்தில் கரும்புப் பயிரில்லாத சமயத்தில், மறுதாம்புப் பயிரிலும் (Ratoon crops) இவை ஆட்சி செலுத்துகின்றன. அடியோடு கரும்பு தோண்டப்பட்ட நிலத்தில், குறிப்பிட்ட சில செடி கொடிகளின் வேர்களைத் தாக்கி தங்களைக் காத்துக் கொள்கின்றன. தக்காளி, வேளைப் பூண்டு (Cleome Viscosa), குப்பை மேனி (Acalypha Indica) போன்றவை அவற்றில் சில. கரும்பு மீண்டும் பயிரிடப்படும்போது இப் புழுக்கள் பயிரைத் தாக்குகின்றன.

தடுக்கும் முறைகள்.—வேளைப்பூண்டு, குப்பைமேனி போன்ற களைகளை (Weeds) நீக்குவதன் மூலம் ஓரளவு இப்புழுக்களின் வேகத்தைக் குறைக்கலாம். மாற்றுப் பயிரிடல் முறையிலும் (Crop Rotation) சற்று கட்டுப் படுத்தலாம். ஆனால் "நெமகான்" (Nemagan) என்ற புதிய மருந்து இப்புழுக்களை அழிக்கின்ற ஆற்றல் மிக்கது. இது (Long residual effect) நீண்ட நாட்கள் நிலத்தில் தங்கி பயன்தரும் தன்மையுடையதால் இப் புழுக்களின் கொடுமை வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தற்போது கண்டறிந்துள்ளனர்.

உபயோகிக்கும் விதம்.—ஒரு ஏக்கருக்கு இரண்டரை காலன் அளவு திரவ மருந்து பயன்படுத்தப்படவேண்டும். மருந்துள்ள டின்னி (Tin)-லிருந்த ஒரு நீண்ட இரப்பர் குழாயினால் வடிகுழாய் போன்ற ஏற்பாடு செய்தோ அல்லது சாதாரண (Tap system) விடுகுழாய் அமைத்தோ, சொட்டுச் சொட்டாக மருந்து பாசன வாய்க்கால் நீரில் விழுமாறு செய்துவிட்டால் எவ்விதத் தொல்லையும் இல்லாமல் உபயோகிக்கலாம். இதற்கு மருந்தடிக்கும் கருவி, அதிகப்படி ஆள் கூலி (Extra wages) முதலியன தேவைப்படாது. இன்னும் சிக்கனமாகவும், சுலபமாகவும் இருக்க, இம்மருந்தில் ஒரு பாத்தியளவுக்குத் தேவைப்படும் அளவைக் கணக்கிட்டு, ஒவ்வொரு பாசனத்தின்போது நீரில் கலந்து விடலாம்.

ஒரு ஏக்கருக்குத் தேவைப்படும் இரண்டரை காலன் மருந்து விலை ரூ. 110 முதல் 130 வரை ஆகிறது. ஆனால் அதை உபயோகிப்பதில் அதிகச் சிரமமோ, செலவோ இல்லை. இம்மருந்துக்கு கரும்பின் மகசூலைத் தூண்டும் ஆற்றல் இருப்பதாகவும், ஏக்கருக்கு நான்கு முதல் ஏழு டன் வரை இதைப் பயன்படுத்துவதால் உபரி மகசூல் கிடைப்பதாகவும் கண்டறிந்துள்ளனர். ஒரு டன் கரும்பு ரூ. 50 வீதம் கணக்கிட்டால் ரூ. 200 முதல் ரூ. 350 வரை உபரி வருமானம் கிடைக்கிறது. அதனால் ரூ. 100 முதல் ரூ. 150 வரை நிகர லாபம் அதிகரிக்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் விரைவாகப் பரவிவரும் விலாங்குப் புழுவின் கொடுமையைக் கட்டுப்படுத்தத் தவறினால், எதிர் காலத்தில் கரும்பு விவசாயிக்கு இதுவும் ஒரு பெரும் தலைவலியாகிவிடும் என்பதில் ஐயமில்லை. "வருமுன் காப்பதே சிறந்ததென்பதை" நன்குணர்ந்த தென்னாற்காட்டு கரும்பு விவசாயப் பெருங்குடிமக்கள் இம்மருந்தைப் பெரிதும் பயன்படுத்தி மிக்க பயன் அடைவார்கள் என்பதற்குச் சொல்லவும் வேண்டுமோ?

'மாருத்' சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயமுத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினுல் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்.
(No. C-1, 40404/64—21-4-64.)

குணங்கள் :

சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.

2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லான்ட்ஸில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தட்டினுல் செய்யப்பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c. m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



மாருத் சார்ஜ் பம்ப்
ரூ. 280

'மாருத்'
நீடித்த அழுத்த சக்தியோடு முதுகில் சுமந்து செல்லக் கூடிய ஸ்ப்ரேயர்.

18 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 290
பித்தளையினுல் செய்யப்பட்டது
ரூ. 230

14 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 280
பித்தளையினுல் செய்யப்பட்டது
ரூ. 230



தயாரிப்பாளர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஓர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
தபால் பெட்டி எண். 539
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், பெங்களூர்-2.

முந்திரியின் முன்னேற்றம்

வயி. சோமசுந்தரம் அம்பலம், அருகுறிஞ்சி, வேப்பங்குளம் அஞ்சல் கல்லல்.

கிழக்கு இராமநாதபுரம் முந்திரி சாகுபடிக்கு மிகவும் ஏற்ற இடம். அகில இந்திய விவசாய ஆராய்ச்சி மன்றத்தின் உபதலைவர் திரு ரந்தாவா அவர்கள் இந்த மாவட்டத்தை 1961-ம் வருடம் சுற்றிப் பார்த்தார்கள். கடற்கரையை அடுத்த இராமநாதபுர மாவட்டப் பகுதிகள் முந்திரி சாகுபடிக்கு ஏற்ற இடம் எனக் கூறியுள்ளார்கள். மேன்மை தங்கிய நம் மாநில கவர்னர் திரு. விஷ்ணு ராம் மேதி அவர்களும் அதே அபிப்பிராயத்தைத் தெரிவித்து முந்திரி சாகுபடி செய்ய எல்லா ஏற்பாடுகளும் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டார்கள்.

வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் 1956–57-ம் ஆண்டு முதற்கொண்டே முந்திரி சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி வனத்துறையினரால் ரூ. 2,80,000 செலவில் திருப்பத்தூர்—சிவகெங்கைத் தாலூகாவில் தரிசாகக் கிடந்த சுமார் 5,700 ஏக்கா நிலத்தில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதம் சாகுபடி செய்யப்பட்ட முந்திரிப் பயிர் இப்பொழுது மகசூல் கொடுத்து வருகிறது. இச்சாகுபடியின் மூலம் வருவாய் ஒரு புறமும், நில அரிப்புத் தடுப்பு ஒரு புறமும் ஆக ஒரே கல்லில் "இரண்டு மாங்காய் வீழ்த்தப்பட்டதைப் போன்ற" நன்மை கிடைக்கிறது.

பருவ மழை காலாகாலத்தில் பெய்யாததாலும், போதிய அளவு தண்ணீர் வசதி கிடைக்காததாலும் விவசாயத்தினால் பொருளாதாரம் சீரடையவில்லை. வேறு வருவாய் தரக்கூடிய தொழில் இல்லை. இங்குள்ள புன்செய் நிலங்கள் சிறிது சரள் உள்ள செவல் நிலங்கள் ஆகும். இந்த நிலங்களில் வரட்சியைத் தாங்கக்கூடிய ஏதாவது ஒரு பயிரையாவது, மரத்தையாவது உண்டாக்கி பசுமை காட்டவேண்டும் என்ற ஆர்வம் நீண்ட நாட்களாக இங்குள்ளோர்க்கு இருந்து கொண்டு வந்தது; இச்சமயத்தில்தான் எங்கள் ஜில்லாவிற்கு கலெக்டராக வந்த ஸ்ரீமான் ஜே. ஏ. அம்பாசங்கர், ஐ. ஏ. எஸ். அவர்கள் இப்பகுதிகளில் முந்திரி சாகுபடி செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி அவ்வமயம் உள்ள சிவகெங்கை ஜில்லா விவசாய அலுவலரான ஸ்ரீமான் எம். என். மீனாட்சிசுந்தரம் பி.ஏ., பி.எஸ்ஸி. (ஏ ஜி) அவர்களுடன் கலந்தாலோசித்து அதன்பேரில் இந்நிலங்கள் முந்திரி சாகுபடிக்கு ஏற்றது என்று அறிந்து முந்திரி சாகுபடியை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது,

தனிப்பட்ட விவசாயி ஒவ்வொருத்தரும் முந்திரி சாகுபடியின் முக்கியத்தைப்பற்றி அறிய மாவட்டத் தலைவரால் பல இடங்களில் பஞ்சாயத்துத் தலைவர்கள் பெருந்தலைவர்கள் அதிகாரிகள் இவர்களிடையே கூட்டங்களில் முந்திரி பயிர் செய்ய முன்வந்து ஒத்துழைப்புத் தர வேண்டுமென வேண்டுகோள் விடப்பட்டது.

தனிப்பட்ட நபர்கள் முதன்முதலில் இப்புதிய சாகுபடியைச் செய்ய சற்று தயங்கினர். ஆகவே முன்னோடியாக பரீட்சார்த்தமாக தரிசு நிலம் சுமார் 30 ஏக்கரில் பஞ்சாயத்து யூனியனிலுள்ள விவசாய அலுவலர், கிராம நல ஊழியர், விவசாயத்துறை பணியாளர்களின் உதவி கொண்டு முந்திரி சாகுபடி செய்யத் தீர்மானித்தோம்.

அதன்படி $2' \times 2' \times 2'$ என்ற அளவில் உள்ள 2,500 குழிகள் 20' இடைவெளியில் வெட்டப்பட்டன. முந்திரி சாகுபடியில் அதிக கவனம் செலுத்தி வரும் எங்கள் மாவட்ட விவசாய அதிகாரி அவர்களால் ஆரம்பித்தது எங்களது அதிர்ஷ்டமே. தற்சமயம் 55 ஏக்கர் வரை சாகுபடி செய்யப்படடுள்ளது. எங்களை பின்பற்றி வேப்பங்குளம் கிராமத்திலுள்ள தனிப்பட்ட நபர்களும் சேர்ந்து சுமார் 150 ஏக்கரில் பயிரிட்டிருக்கிறார்கள்.

நாங்கள் முந்திரி பயிர் செய்து இருக்குமிடம் ஊருக்கும் ரஸ்தாவிற்கும் சமீபமானது. இதனால் முந்திரி சாகுபடியில் அசிரத்தையாக இருந்தவர்கள் கூட இப்பொழுது இதை சாகுபடி செய்ய அதிக ஆர்வத்தோடு இருக்கின்றனர். தனி நபர்கள் முந்திரி சாகுபடியில் அதிக ஆர்வம் காட்வதற்கான அரசாங்கம் அளிக்கும் கடன் வசதியையும் பெற்றோம். 1964–65-ம் ஆண்டில் அதிக அளவில் இச்சாகுபடியை இந்த யூனியனில் மேற்கொண்டதற்காக யூனியனுக்கு மாவட்ட சுழற்கோப்பையும் எமக்கு நற்சான்றிதழ் வழங்கவும் முடிவு செய்துள்ளார்கள். எமது முந்திரி தோட்டத்தை மாவட்ட தலைவர்களும், பல அதிகாரிகளும் பார்வையிட்டு பாராட்டியுள்ளார்கள்.

முந்திரி சாகுபடிக்காக நாங்கள் செலவு செய்த தொகை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 60 தான். ஆடு, மாடு முதலிய மிருகங்களால் அழிக்கப்படாமல் இருப்பதற்கு முள் வேலியும் உயிர் வேலியும், வைத்து பாதுகாதது வருகின்றேன். கன்றுகளை சுற்றிப் பாத்தி கட்டியுள்ளதால் மழைநீரை தேக்குவதற்கு ஏதுவாகிறது. கன்றுகளுக்கு ஊடே கொளுஞ்சி, உழுந்து, எள்ளு, கடலை போன்றவைகளையும் பயிர் செய்து இடை காலத்தில் வருமானம் கிடைக்க ஏதுவாகிறது. செடிகள் தற்சமயம் 5 அடி உயரம் வளர்ந்துள்ளன. பல வருடங்களாக பொட்டலாக இருந்த நிலம் இப்பொழுது பசுமை நிறைந்த முந்திரி செடிகளாய் காணப்படுவது என்னுடைய மிகப் பெரிய சாதனை என்று கூறிக்கொள்ளுவதில் நான் பெருமைப் படுகிறேன்.

முந்திரி செடிகள் பூத்துக் காய்க்க ஆரம்பித்ததும் எங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என நம்புகின்றோம். இதைக்கொண்டு பல வேலைகளை மேற்கொள்ள ஏதுவாயிருக்கும் என்ற எண்ணத்தில் உள்ளோம். இதேபோல வரண்ட பிரதேசங்களில் இருக்கும் என் போன்ற விவசாயிகள் முந்திரி சாகுபடியை தையரிகமாக மேற்கொண்டு அரசாங்கம் வகுத்துள்ள அபிவிருத்தி திட்டங்களை நன்முறையில் நடத்துமாறு வேண்டுகிறேன்.

1965-ம் வருடம் ஜூலை மாதக் கால நிலை அறிக்கை

(சு. பாலசுப்பிரமணியன், பி.ஏ.பி.எஸ்.ஸி. (ஏஜி) & சீ. ரங்கநாதன், பி.எஸ்.ஸி. (ஏஜி) விவசாயக் காலநிலை ஆய்வுப் பிரிவு கோவை—3)

இம்மாதத்தில் முதல் ஐந்து தினங்களில் தமிழகத்தின் குறிப்பிட்ட சிற்சில இடங்களில் மழை பெய்தது. அடுத்த இரண்டு நாட்கள் பொதுவாக வரட்சி நிலவியது. பின்னர் 8, 9 தேதிகளிற் குறிப்பிட்ட சிற்சில இடங்களில் மழை பெய்தது. 10, 11, 12 தேதிகளில் பொதுவாக வரட்சி நிலவியது. 13 முதல் 21 தேதி வரை குறிப்பிட்ட இடங்களில்மட்டும் இலேசான மழையிருந்தது. ஆனால் 1965–ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ந் தேதியில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. 1965–ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ந் தேதியன்று வரட்சி நிலவியது. 23 முதல் 26–ந் தேதி வரை தமிழகத்தில் குறிப்பிட்ட சிற்சில இடங்களில் மழை பெய்தது. 1965 ம் ஆண்டு ஜூலை மாதம் 27–ந் தேதி முதல் மூன்று நாட்களுக்கு வானிலை வரண்டிருந்தது. இம்மாதத்தில் கடைசி இரு நாட்களில் குறிப்பிட்ட சிற்சில இடங்களில் இலேசான மழை பெய்தது. இம்மாதத்தில் பகல் வெப்ப நிலையில் பெருதத மாற்றங்கள் ஒன்றும் இல்லை.

கால நிலையும், பயிர்வளர்ச்சியும்.—செங்கற்பட்டு மாவட்டத்தில் இம்மாதம் சற்று அதிக மழை பெய்தது. திரூர் பகுதியில் பெய்த மழையால சொர்ணவரி நெற்பயிர் பயனுற்றது. மேலும் இம்மழை நிலங்கள் தயாரிக்க உதவியது. TKM6 நெற்பயிரில் குருத்துப் பூச்சிகள் காணப்பட்டன. வட ஆற்காடு, தென் ஆறகாடு மாவட்டங்களில் போதிய மழை பெய்யவில்லை. பாலூர் பகுதியில் நெல், கரும்பு, கம்பு, சோளம் மற்றும் காய்கறிப் பயிர்கள் பயனடைந்தன.

திண்டிவனம், பகுதியில் சோளம், நிலக்கடலை விதைப்புக்கு வந்தன. தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமாரான மழை பெய்தது. ஆடுதுறை பகுதியில் குருவை நாற்றுகளுக்கும், குறுவை நெற்பயிச்கும் இம்மழை உதவியது. இங்கு நெற்பயிரில் வெட்டுக்கிளிகள் சிறிதளவு காணப்பட்டன. பட்டுக்கோட்டையில் போதிய மழை பெய்யாததால் ATD 27 நெற்பயிரும், காய்கறிப் பயிர்களும் வாட்டமுற்றன. மேட்டூர் அணைத்திட்டத்தில் தண்ணீர் அளவு குறைந்து இருப்பதால் முறைபோட்டு தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருந்தது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சற்று அதிக மழை பெய்தது. ஆனல் கரூரில் போதிய மழை இல்லை. இங்கு நவரை நெல், கோடைச் சோளம் மற்றும் பஞ்சாப் பருத்தி அறுவடைக்கு வந்தன. ஆனல் கரும்பு, நிலக்கடலை முதலிய பயிர்கள் மழையின்றி வாடின. மேலும் சோளம், எள், கடலை, மஞ்சள் முதலியன விதைக்க தாமதமாயிற்று. மதுரை மாவட்டத்தில் மழை மிகவும் குறைவு. பெரியகுளம் பகுதியில் பெய்த சொற்ப மழையும் சோளம், ராகி மற்றும் காய்கறிப் பயிர்கள் பயனடைந்தன. மேலும் போதிய மழையின்றி பருத்திப் பயிர் வாட்டமுற்றது. ராமனுதபுரத்தில் மிகக் குறைந்த மழையே பெய்தது. சாத்தூர் பகுதியில் MCV2 பருத்தியில் பறிப்பும் நிலக்கடலை அறுவடையும் நடந்தது. எள் மற்றும் வரகு விதைக்கப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் மிச்ச சொற்ப மழை இருந்தது. கோவில்பட்டியில் நிலவிய வறட்சி வெங்காயப் பயிரை பாதித்தது மேலும் குதிரைவாலி பயிர் வாட்டமுற்றது. ஆனல் சோளத்திற்கு இந்நிலை உதவியது.

அம்பாசமுத்திரத்தில் மழையின்றி நெல் நடவு தாமதமாயிற்று. கன்யாகுமரி மாவட்டத்தில் பெய்த மழையால் நெல் நடவு நடந்தது எனினும் பூக்கும் தருணத்தில் உள்ள நெற்பயிர்களுக்கு இம்மழை இடையூராயிற்று இங்கு எலுமிச்சை வகைகளுல் இலைப் பேன்கள் காணப்பட்டன. சேலம் மாவட்டத்தில் மழையின்றி நிலக்கடலைப் பயிர் வாட்டமுற்றது. ஓமலூர் பஞ்சாயத்து யூனியனுள்ள பச்சினம்பட்டி கருப்பூர் முத்துனுய்க்கன்பட்டி, காட்ட கவுண்டன் பட்டி புளியம்பட்டி முதலிய பகுதிகளில் சிகப்புக்கம்பளிப் பூச்சிகள் காணப்பட்டன. மேலும் இங்கு TMV2 நிலக்கடலையில் திரிபஸிம் காணப்பட்டன.

கோயமுத்தூர் மாவட்டத்தில் மழையின்மையால் சோளம், நிலக்கடலை விதைப்பும், நெல் நடவும் தடங்கலாயிற்று. நெற்பயிரில் நாவாய்ப் பூச்சிகளும், இலைகபுள்ளி நோயும், ராகியில் அசுக்களும், நாவாய்ப்பூச்சிகளும், கொள்ளை நோயும், சோளப்பயிரில் கதிர் வண்டுகளும், நிலக்கடலையில் திரிப்ஸிம், நாவாய்ப்புச்சிகளும், டிக்கா இலைப்புள்ளி நோயும் மிளகாய்ப் பயிரில் திரிப்ஸிம் மிதமாகக் காணப்பட்டன. பொள்ளாச்சியில் நெல் ராகி முதலியன நடவுக்கு வந்தன. சித்திரைப்பட்டம், சோளம் அறுவடைக்கு வந்தது. இங்கு கத்தரியில் தண்டு துளைப்பான்களும் நிலக்கடலையில் இலை சுருட்டும் புச்சிகளும் வெகுவாகக் காணப்பட்டன. அவியார் பகுதியில் சோளத்திலும் நெற்பயிரிலும், குருத்துப்பூச்சிகளும் மிளகாயில் திரிப்ஸிம், ஆமணக்கில் புழுக்களும் காணப்பட்டன. நீலகிரி மாவட்டத்தில் பெய்த மழையால் பொதுவாக எல்லாப் பயிர்களும் பயனந்தடைன. ஆனல் இம்மழை நஞ்சநாட்டில் உருளைக்கிழங்கில் வாடல் நோய் பரவக் காரணமாயிற்று.

இம் மாதத்தியக் குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழையளவுகளும் வருமாறு:—

குறிப்பிடத்தக்க மழையளவுகள்
(அங்குலத்தில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	பெய்த மழையின் அளவு
1	9-7-1965	திருச்சினுப்பள்ளி	2.17
2	16-7-1965	நஞ்சனுடு	4·20
3	29-7-1965	திருப்பதிகாடம்	2·55
4	30-7-1965	கடலூர்	2.76

பிராந்திய மழையளவுகள்
(அங்குலத்தில்)

வரிசை எண்	பிராந்தியத்தின் பெயர். (1)	ஜூன் மாத மழை யளவு. (2)	சராசரியி லிருந்து மாறுபாடு. (3)	குறிப்பு. (4)
1	வட பிராந்தியம்	3·4	—0·5	சற்று குறைவு
2	கீழ்க்கரை பிராந்தியம்	2·4	—0·3	ஷெ
3	மத்திய பிராந்தியம்	1·7	—2·4	குறைவு
4	தென் பிராந்தியம்	1·2	+1·0	அதிகம்
5	மலைப் பிராந்தியம்	6·2	—1·1	குறைவு

1965-ம் ஆண்டு ஜூன் மாதத்திய காலநிலை அறிக்கை மழையளவு (அங்குலத்தில்).

இடத்தின் பெயர் (1)	இம்மாத மழை யளவு. (2)	சராசரியி லிருந்து மாறுபாடு. (3)	ஜனவரி 1-ம் தேதி முதல் மழை யளவு (4)
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்).	5·9	+2·3	10·3
திரூர் குப்பம்*	3·2	—0·6	4·5
வேலூர்	3.0	—1·6	7·9
குடியாத்தம்*	1·6	—2·2	6·1
கீழ்க்கரை பிராந்தியம்.			
பாலூர்*	3·3	—†	9·2
திண்டிவனம்*	2·8	—1·1	8·4
கடலூர்	4·5	+1·9	9·3
நாகப்பட்டினம்	1·3	—0·4	8.8
ஆடுதுறை*	0·4	—2·1	7.1
பட்டுக்கோட்டை * ..	2·0	—0·3	8.0
மத்திய பிராந்தியம்.			
சேலம்	2·0	—1·8	7·9
சேலம்*	2·0	—2·0	9·4
கோயமுத்தூர்* ..	1·4	—2·0	8·8
கோயமுத்தூர் ..	0·7	—1·0	5·3
ஆளியார் நகர்* ..	1.9	—8·4	7·3
திருச்சிராப்பள்ளி ..	2·2	+1·1	6·4
தென் பிராந்தியம்.			
மதுரை	0·9	—1·1	3·8
பாம்பன	0·1	—0·4	5·4
கோவில்பட்டி*	இல்லை	—1·7	7·1
பாளையங்கோட்டை ..	0·3	—0·1	4·3
அம்பாசமுத்திரம்* ..	0·2	—1·4	6·7
நாகர்கோயில்* ..	5·5	+0·6	19·9
கன்னியாகுமரி* ..	1·6	—3·1	9·8
மலைப் பிராந்தியம்.			
கோடைக்கானல் ..	4·2	—0·5	21·4
கூனூர் *	2·9	—1·0	18·3
உதகமண்டலம்* ..	6·0	—1·5	14·7
நஞ்சநாடு*	12·0	—3·5	20·5

* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.
† 0·04" மழை.

உங்கள் விதைகளை பரிசோதனை செய்து கொள்ளுங்கள்

விதையின் தூய்மை, முளைக்கும் தன்மை, ஈரம் ஆகிய வற்றை அறிய விதைகளைப் பரிசோதனை செய்யவேண்டும். கோவையிலுள்ள விதைச் சோதனைச் சாலையில், விதைகள் இலவசமாகவே பரிசோதனை செய்யப்படுகின்றன.

மாதிரி எடுக்கவேண்டிய முறைகள் :—

1. ஒவ்வொரு ரகத்திற்கும், ஒவ்வொரு மாதிரி எடுத்தனுப்ப வேண்டும்.

2. தோட்டக்கால், மானவாரி, நஞ்சை ஆகிய வெவ்வேறு நிலங்களில் பயிர்செய்யப்பட்ட ஒரு பயிர் ரகத்திற்கு நிலத்திற்கேற்றவாறு தனித்தனி மாதிரி எடுத்தனுப்ப வேண்டும்.

3. ஐந்து மூட்டை இருப்புக்கு, ஒவ்வொரு மூட்டைக்கும் ஒரு மாதிரி எடுத்தனுப்ப வேண்டும். 30 மூட்டைகள் இருப்பு இருப்பின் மூன்று மூட்டைக்கு ஒரு மாதிரி எடுத்தனுப்ப வேண்டும். 30–க்கும் மேற்பட்டால் 5 மூட்டைக்கு ஒரு மாதிரி எடுத்தனுப்ப வேண்டும்.

மாதிரியின் எடை அளவுகள்

		கிராம்.
1.	மக்காச் சோளம், நெல், கோதுமை, பீன்ஸ், பருத்தி, நிலக்கடலை போன்ற விதைகள்.	1,000
2.	சோளம், கம்பு, முள்ளங்கி	500
3.	வெங்காயம், பெர்சீம் ..	100
4.	முட்டைகோஸ், காலிபிளவர்	250

அனுப்பப்படும் மாதிரியுடன் பின்வரும் விவரங்களடங்கிய தாளும் அனுப்பப்பட வேண்டும்.

(அ) மாதிரி எடுத்த தேதி..............மாதிரி எடுத்தவர்...................

(ஆ) அனுப்புவோர் பெயர்................

(இ) முகவரி.........................

(ஈ) அனுப்பப்படும் விதையின் வகை..........

(உ) விதைப் பற்றிய குறிப்பு................

(ஊ) மாதிரி எடுக்கப்பட்ட இருப்பின் எண்......

(எ) ஒவ்வொரு இருப்பிலிருந்தும் எடுக்கப்பட்ட மாதிரியின் அளவுகள்..............

பரிசோதனைக்கான விதைகளை அனுப்ப வேண்டிய முகவரி :—

தாவர இயல் நிபுணர்,
விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம்,
கோயமுத்தூர்–3.



முதல் அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் கல்லூரியை துவக்கிவைக்கும் காட்சி.

முதல் அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் கல்லூரி 'சின்னத்தை' பார்வையிடுதல்.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1965



மதுரை வேளாண்மைக் கல்லூரியைத் துவக்கிவைத்த திரு எம். பக்தவத்சலம் அவர்கள் சொற்பொழிவு ஆற்றுதல்.



கல்லூரித் தலைவர் திரு மரியகுழந்தை அவர்கள், முதல் அமைச்சர், விவசாய அமைச்சர், உணவு அமைச்சர் ஆகியோருக்கு கல்லூரியின் ஆய்வுக் கூடத்தைப் பற்றி கூறுதல்.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.